தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**சாத்தனூர் அணை நீர்மட்டம் 76 அடியாக உயர்வு**

கிருஷ்ணகிரி அணையில் இருந்து உபரி நீர் திறந்துவிடப்பட்டதால், சாத்தனூர் அணையின் நீர்மட்டம் வியாழக்கிழமை 76 அடியாக உயர்ந்தது. பருவ மழை காரணமாக கிருஷ்ணகிரி அணை அண்மையில் நிரம்பியது. இதையடுத்து, அணையின் உபரி நீர் தென்பெண்ணை ஆற்றின் வழியாக திறந்து விடப்பட்டுள்ளது. இந்த தண்ணீர் புதன்கிழமை (அக்டோபர் 29) அதிகாலை திருவண்ணாமலை மாவட்டம், சாத்தனூர் அணையை வந்தடைந்தது. தொடர்ந்து அணைக்கு தண்ணீர் வந்து கொண்டிருப்பதால், அணையின் நீர்மட்டம் உயரத் தொடங்கியுள்ளது. நீர்மட்டம் 76 அடி: சாத்தனூர் அணையின் மொத்த உயரம் 119 அடி. இதில், புதன்கிழமை காலை 6 மணி நிலவரப்படி, 72.75 அடி உயரத்துக்கு தண்ணீர் தேங்கியிருந்தது. இந்த நீர்மட்டம் வியாழக்கிழமை (அக்டோபர் 30) காலை 6 மணிக்கு 76 அடியாகவும், அணையின் நீர் கொள்ளளவு 1,216 மில்லியன் கன அடியாகவும் உயர்ந்துள்ளது. தொடர்ந்து, கிருஷ்ணகிரி அணையில் இருந்து 2,419 கன அடி உபரி நீர் திறந்து விடப்படுகிறது. இதனால் திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**திருப்பத்தூரில் விவசாயிகள் குறை தீர்க்கும் முகாம்**

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் வட்டார அளவிலான விவசாயிகள் குறை தீர்க்கும் முகாம் புதன்கிழமை நடைபெற்றது. திருப்பத்தூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் நடைபெற்ற குறை தீர்க்கும்

முகாமுக்கு மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கனேசன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் முத்து மீனாள் முன்னிலை வகித்தார். திருப்பத்தூர் வட்டாரப் பகுதியைச் சேர்ந்த சுமார் 50 விவசாயிகள் இம்முகாமில் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்குத் தேவையான விதை நெல் பி.பி.டி 5304 வேளாண்மை விரிவாக்க மையத்தில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது என்றும் ரசாயன உரங்களான டி.ஏ.பி. யூரியா, பொட்டாஸ் ஆகியன கிராம கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகளுக்கு நியாயமான விலையில் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் கணேசன் தெரிவித்தார். மேலும் விவசாயிகளின் குறைகள் கேட்கப்பட்டு அவற்றை நிவர்த்தி செய்ய வழிவகை செய்யப்பட்டது. தொடர்ந்து நெல் பயிர் காப்பீடு செய்வதற்கான விண்ணப்பங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. விண்ணப்பத்தை கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று வங்கிகளில் உரிய கட்டணம் செலுத்தி பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் விவசாயிகள் பங்குபெற கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் இம்முகாமில் தோட்டக் கலைத் துறை மற்றும் வேளான் விற்பனைத் துறை அலுவலர்கள் கலந்து கொண்டு துறை ரீதியான திட்டங்களை எடுத்துக் கூறினர். மேலும் இம் முகாமில் தோட்டக் கலை அலுவலர் காமாட்சி, வேளாண்மை உதவி அலுவலர்கள் இமாம் ஜாபர், ஜோதிராசு, சங்கீதா மற்றும் அட்மா, பணியாளர்கள் தங்கப் பாண்டியன், அலெக்ஸ் பாண்டியன் ஜோதி ஆகியோர் கலந்து கொண்டனர். முகாம் முடிவில் துணை வேளாண்மை அலுவலர் பெ. ஸ்ரீதரன் நன்றி கூறினார்.

## <u>மகளிர் குழுவினருக்கு "அம்மா' பண்ணை மகளிர் திட்டப் பயிற்சி</u>

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள மகளிர் சுயவுதவிக் குழுவினருக்கு "அம்மா' பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்ட அறிந்துணர்வுப் பயிற்சி முகாமை மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் செவ்வாய்க்கிழமை திருவள்ளூரில் தொடங்கி வைத்தார். மாவட்ட வேளாண்மைத் துறை சார்பில் திருவள்ளூரில்

உள்ள தனியார் திருமண மண்டபத்தில் "அம்மா' பண்ணை மகளிர் மேம்பாட்டுத் திட்ட அறிந்துணர்வுப் பயிற்சி முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்த முகாமைத் தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் பேசியது: நம் நாட்டின் முதன்மைத் தொழிலாகவும், பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும், கிராமப்புற மக்களின் வாழ்வுக்கு ஆதாரமாகவும் விளங்குவது வேளாண் தொழில். இதில் மகளிரின் பங்கேற்பை ஊக்கப்படுத்திடும் நோக்கில் முன்னால் முதல்வரால் தமிழக சட்டப்பேரவையில் 110 விதியின் கீழ் "அம்மா' பண்ணை மேம்பாட்டுத் திட்டம் அறிவிக்கப்பட்டு இடுப்பொருள்கள் உற்பத்தி உள்ளிட்ட விவசாயப் பணிகள், அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகள் ஆகியவற்றுக்கு மகளிருக்குப் பயிற்சி அளிக்கிறது. மேலும் விவசாயம், பண்ணை சார் தொழில்கள் குறித்து தொழில்நுட்பப் பயிற்சி அளித்து ஒவ்வொரு மகளிரின் பொருளாதார நிலையை உயர்த்தி நீடித்த நிலைத்த வருமானம் கிடைக்க செய்வதற்கான "அம்மா' பண்ணை மேம்பாடுத் திட்டம் வாயிலாக தமிழக அரசு பல்வேறு திட்டங்களையும், நிதி ஒதுக்கீடுகளையும் வழங்கி வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் திருவள்ளூர் மாவட்டத்தில் வேளாண் துறை வாயிலாக 18 பண்ணை மகளிர் குழுக்களும், தோட்டக்கலைத் துறை வாயிலாக 10 பண்ணை மகளிர் குழுக்களும் என 28 குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு குழுக்களிலும் 20-க்கும் மேற்பட்ட மகளிர் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் தரமான விதை உற்பத்தி, பசுந்தாள் விதை உற்பத்தி, உயிரின பூச்சிக் கொல்லிகள் உற்பத்தி, மண்புழு உரம் தயாரித்தல், நாட்டுக் கோழி வளர்ப்பு, ஆடு வளர்ப்பு, மீன் வளர்ப்பு, பட்டுப் பூச்சி உற்பத்தி, தீவனப் பயிர் சாகுபடி, அறுவடைக்குப் பிந்தைய செயல்பாடுகள், சிறு தானியங்கள், பயிர் வகைகள், காய்கறிகள், இளநீருக்கு மதிப்பு கூட்டுதல் உள்ளிட்டவைகளுக்கு இலவசமாகப் பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. இந்தப் பயிற்சிகளையெல்லாம் மகளிர் பெற ஏதுவாக

இந்த அறிந்துணர்வுப் பயிற்சி அளிக்கப்படுகிறது. இதில் பங்கேற்கும் மகளிர்கள் பயிற்சியை முழுமையாகப் பெற்று வேளாண் உற்பத்திகளை மதிப்புக் கூட்டத்தக்க வகையில் தயார் செய்து மாபெரும் பொருளாதார வளர்ச்சிப் பெற வேண்டும் என்றார். இதைத் தொடர்ந்து "அம்மா' பண்ணை மகளிர் மேம்பாட்டு திட்டம் குறித்த விழிப்புணர்வுக் கையேட்டை மகளிர் குழு உறுப்பினர்களுக்கு வழங்கினார். இந்தப் பயிற்சி முகாமில், வேளாண் துறை இணை இயக்குநர் சுந்தரராஜன், வேளாண் துறை துணை இயக்குநர்கள், பாபு, அண்ணாமலை உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ஒகேனக்கல் அருவிகளில் வெள்ளம்**

தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியாற்றில் திங்கள்கிழமை நீர்வரத்து அதிகரித்ததால், அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. மேட்டூர் அணைக்கும் நீர்வரத்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த ஒரு வாரத்துக்கும் மேலாக மழை பெய்து வருகிறது. இதையடுத்து, ஒகேனக்கல் காவிரியில் ஞாயிற்றுக்கிழமை நொடிக்கு 28 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து, திங்கள்கிழமை 30 ஆயிரம் கன அடியாக அதிகரித்தது. இதனால், பிரதான அருவிக்குச் செல்லும் நடை பாதையை மூழ்கடித்து தண்ணீர் செல்கிறது. ஐந்தருவிப் பகுதியிலும் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. ஒகேனக்கல் அருவிப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை 25.40 மி.மீட்டர் பதிவானது. மேட்டூர் அணை: மேட்டூர் அணைக்கு கடந்த சில நாள்களாக நீர்வரத்து அதிகரித்ததால், அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை 91.74 அடியாக இருந்தது. அணைக்கு ஞாயிற்றுக்கிழமை நொடிக்கு 34,661 கன அடியாக இருந்த நீர்வரத்து, திங்கள்கிழமை 27,873 கன அடியாகக் குறைந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனம், கிழக்கு, மேற்குக் கால்வாய் பாசனத்துக்காக நொடிக்கு 18,600 கன அடி தண்ணீர்

திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 54.66 டி.எம்.சி.யாக உள்ளது.

**<u>இலவச கால்நடை மருத்துவ முகாம்</u>**

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகேயுள்ள மோட்டூரில் திங்கள்கிழமை கால்நடைகளுக்கான இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது. ஓமலூர் ரோட்டரி சங்கம், எஸ்.எஸ்.கே. பிரிக்ஸ் நிறுவனம் இணைந்து நடத்திய இந்த மருத்துவ முகாமிற்கு ரோட்டரி சங்கத் தலைவர் சரோஜா தலைமை வகித்தார். மண்டல உதவி ஆளுநர் ஆண்டியப்பன், ரோட்டரி சங்கச் செயலர் கண்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ரங்கநாதன், தினேஷ்குமார் ஆகியோர் முகாமை தொடக்கி வைத்தனர். மோட்டூர், வேலகவுண்டன்புதூர், பச்சனம்பட்டி, திண்டமங்கலம், கலர்காடு பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது கால்நடைகளை அழைத்து வந்து பரிசோதனை செய்து கொண்டனர். முகாமில் கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம், கோமாரிநோய் உள்பட பல்வேறு நோய்களுக்கு தடுப்பூசி போடுதல், சினைப் பரிசோதனை, சுண்டுவாத அறுவைச் சிகிச்சை, கோழிகளுக்கு வெள்ளைக் கழிச்சல் நோய்த் தடுப்பூசி போடுதல் உள்ளிட்ட சிகிச்சைகள் அளிக்கப்பட்டன.

**தினமலர்**

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>வடமாநிலங்களில் மழை எதிரொலி: தீவன விலை உயர்வு</u>



நாமக்கல்: வடகிழக்கு பருவமழை மற்றும் புயல் காரணங்களால், வடமாநிலங்களில் இருந்து, தமிழகத்திற்கு கொள்முதல் செய்யப்படும் கோழித்தீவன மூலப்பொருட்களின் சப்ளை குறைந்து விட்டது.அதனால், உள்ளூர் மார்க்கெட் மற்றும் இருப்பை அடிப்படையாக கொண்டு, கடந்த சில நாட்களில், தீவனத்தின் விலை, 10 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் செயல்படும் முட்டை மற்றும் கறிக்கோழிப் பண்ணைகளுக்கு தேவையான, சோயா புண்ணாக்கு, கடுகு புண்ணாக்கு ஆகியவவை, 100 சதவீதம், மத்தியபிரதேசம், பீகார், ஒடிசா, மகாராஷ்டிரா உள்ளிட்ட வடமாநிலங்களில் இருந்தே பெறப்படுகிறது.இந்நிலையில், அங்கிருந்து வரத்து குறைந்ததால், 2,610 ரூபாயாக இருந்த 100 கிலோ சோயா புண்ணாக்கு, நேற்று, 2,760 ரூபாயாக திகரித்தது.அதேபோல், கடலை புண்ணாக்கு, 2,100லிருந்து, 2,220, கடுகு புண்ணாக்கு, 1,310லிருந்து, 1,370, மக்காச்சோளம், 1,200லிருந்து, 1,270, சூரியகாந்தி புண்ணாக்கு,

1,700லிருந்து, 1,760 ரூபாயாக அதிகரித்துள்ளன. இதனால், உற்பத்தியாளர்கள் கவலையடைந்துள்ளனர்.

**<u>சர்க்கரை உற்பத்தி 2.50 கோடி டன்னாக உயரும்</u>**



புதுடில்லி: நடப்பு 2014–15ம் சந்தைப் பருவத்தில் (அக்.,–செப்.,), நாட்டின் சர்க்கரை உற்பத்தி, 2.50 கோடி டன்னாக உயரும் என, மத்திய அரசு தெரிவித்துள்ளது.இது, கடந்த பருவத்தில் மேற்கொள்ளப்பட்ட சர்க்கரை உற்பத்தியுடன் (2.45 கோடி டன்) ஒப்பிடுகையில், 5 லட்சம் டன் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.இந்நிலையில், இந்திய சர்க்கரை ஆலைகள் கூட்டமைப்பு (இஸ்மா), நடப்பு பருவத்தில் சர்க்கரை உற்பத்தி 2.50–2.55 கோடி டன்னாக இருக்கும் என, மதிப்பீடு செய்துள்ளது.அக்டோபர் துவக்கத்தில் சர்க்கரை கையிருப்பு, 69.20 லட்சம் டன்னாக இருந்தது என, மத்திய அரசின் மதிப்பீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.கச்சா சர்க்கரை ஏற்றுமதிக்கு மத்திய அரசு, ஊக்கத் தொகை வழங்கியதை அடுத்து, கடந்த, 2013–14ம் சந்தைப் பருவத்தில், சர்க்கரை ஏற்றுமதி, 22 லட்சம் டன்னாக இருந்தது.கச்சா சர்க்கரைக்கான ஏற்றுமதி மானியத்தை, நடப்பு பருவத்திலும் தொடர வேண்டும் என, இத்துறை நிறுவனங்கள் கேட்டு கொண்டுள்ளன.மகராஷ்டிரா மற்றும் உத்தர பிரதேச மாநிலங்கள் சர்க்கரை உற்பத்தியில் முன்னணியில் உள்ளன.

**<u>கரும்பு அரவை இலக்கு 2.50 லட்சம் டன்</u>**

திருவள்ளூர்: "திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், நடப்பாண்டு கரும்பு அரவை, 2.50 டன்னாக இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது," என, அரவையை துவக்கி வைத்து, அமைச்சர் ரமணா கூறினார். திருவாலங் காட்டில் உள்ள திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையின் நடப்பாண்டிற் கான அரவை பருவம், நேற்று துவங்கியது. மாவட்ட ஆட்சியர் வீர ராகவ ராவ் தலைமை வகித்தார். பால்வளத் துறை அமைச்சர் ரமணா, அரவையை துவக்கி வைத்து பேசுகையில், "திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், நடப்பு ஆண்டில், 2.50 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆலையை நவீனப்படுத்தி, இணைமின் திறனை மேம்படுத்தி, அரவை திறனை, 3,000 மெட்ரிக் டன்னாக உயர்த்த, 35 கோடி ரூபாயில் திட்ட மதிப்பீட்டு கருத்துரு தயாரித்து, விரைவில் முதல்வரிடம் தெரிவித்து, நடவடிக்கை மேற்கொள்ளப்படும்," என்றார். நிகழ்ச்சியில், தமிழ்நாடு கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை தலைவர் ஞானமூர்த்தி, திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் எத்திராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ரூ.1.53 லட்சத்திற்கு பருத்தி ஏலம்

நாமக்கல் : நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 1.53 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. நாமக்கல் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (என்.சி.எம்.எஸ்.,), திருச்செங்கோடு சாலையில் உள்ள குடோனில் பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. ராசிபுரம், நாமக்கல், சேலம், கரூர், புதுச்சத்திரம், எருமப்பட்டி, திருச்செங்கோடு நாமகிரிப்பேட்டை, புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, பத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள், 130 பருத்தி மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு

வந்தனர்.ஆர்.சி.எச்., ரகம் அதிகபட்சமாக, 4,230, குறைந்த பட்சமாக, 3,900 ரூபாய்க்கு ஏலம் போனது. நேற்றைய ஏலத்தில், மொத்தமாக 1.53 லட்சம் ரூபாய்க்கு பருத்தி ஏலம் நடந்தது. விருதுநகர், ராஜபாளையம், திருப்பூர், அவிநாசி, பெருந்துறை, கொங்கணாபுரம், ஊத்தங்கரை, ஆத்தூர், சேலம், திருச்செங்கோடு, ஆகிய பகுதியை சேர்ந்த, வியாபாரிகள் பருத்தியை ஏலம் எடுத்து சென்றனர்.

**<u>மழையால் சாகுபடி பரப்பு அதிகரிப்பு: 1,14,516 ஹெக்டேர் பயிர் விளைச்சல்</u>**

நாமக்கல் : ""நாமக்கல் மாவட்டத்தில், தற்போது பெய்த மழையால், ஒரு லட்சத்து, 14 ஆயிரத்து, 516 ஹெக்டேர் பரப்பில், சாகுபடி செய்யப் பட்டுள்ளது," என, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தெரிவித்தார். நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், நேற்று விவசாய குறைதீர் கூட்டம் நடந்தது. விவசாயிகள் மற்றும் விவசாய பிரதிநிதிகளின் கோரிக்கை மற்றும் புகார்கள் குறித்து, மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துவிட்டு, பின்னர் அவர் கூறியதாவது: நாமக்கல் மாவட்டத்தின் ஆண்டு சராசரி மழையளவு, 716.5 மி.மீ., ஆனால், நடப்பாண்டு அக்டோபர் மாதம் வரை, 546.2 மி.மீ., மழை பெய்துள்ளது. இந்த மழையால், பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள, 79 ஏரிகளில், மின்னக்கல், சேமூர், தேவனாம்பாளையம், மாமுண்டி ஆகிய நான்கு ஏரிகளில், 100 சதவீத கொள்ளவு தண்ணீர் நிரம்பியுள்ளது.பாச்சல், அக்கரைப்பட்டி, 75 சதவீதம், கஸ்தூரிப்பட்டி, எருமப்பட்டி, சரப்பள்ளி, 50 சதவீதம், செல்லியாயிபாளையம், கருப்பனப்பட்டி, 25 சதவீதம் அளவிற்கு தண்ணீர் உள்ளது. மீதமுள்ள, 67 ஏரிகளில், தண்ணீர் இல்லை. பயிர் சாகுபடியில், 4,125 ஹெக்டேர் நெல், 62 ஆயிரத்து, 120 ஹெக்டேர் சிறுதானியம், 9,348 ஹெக்டேர் பயிறு, 26 ஆயிரத்து, 741 ஹெக்டேர் எண்ணெய் வித்து, 1,645 ஹெக்டேர் பருத்தி, 10 ஆயிரத்து, 497 ஹெக்டேர்

கரும்பு என, ஒரு லட்சத்து, 14 ஆயிரத்து, 516 ஹெக்டேர் பரப்பில் சாகுபடி உள்ளது.மாவட்டத்தில், உரம் இருப்பில், பி.ஏ.சி.பி., யில், 655 மெட்ரிக் டன், தனியார் உரக்கடையில், 168 மெட்ரிக் டன் இருப்பு உள்ளது.இவ்வாறு, அவர் கூறினார்.வேளாண் துறை, மின்வாரியம், வனத்துறை, வருவாய்துறை அதிகாரிகள், விவசாய பிரதிநிதிகள், விவசாயிகள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

<u>**பவானிசாகர் அணை நீர்மட்டம் கடந்தாண்டை விட 13 அடி உயர்வு**</u>

சத்தியமங்கலம் : பவானிசாகர் அணையில், கடந்த ஆண்டை காட்டிலும், தற்போது, 13 அடி தண்ணீர் உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். சத்தியமங்கலம் அடுத்துள்ளது பவானிசாகர் அணை. நீலகிரி மலைப்பகுதியில் இருந்து வரும் பவானி ஆறும், கூடலூர் மலைப்பகுதியில் இருந்து வரும் மோயாரும் கலக்கும் இடத்தில், இந்த அணை கட்டப்பட்டுள்ளது. அணையின் மொத்த உயரம், 120 அடியாகும். இதில் சகதி, 15 அடி கழித்து, அணையின் மொத்த நீர்பிடிப்பு உயரம், 105 அடியாக கணக்கிடப்படுகிறது.கடந்த, 20 நாட்களாக, நீலகிரி மலைப் பகுதியில், கனமழை பெய்து வருகிறது. இதனால், அணைக்கு வரும் தண்ணீர் அதிகரித்தது. நேற்று மாலை, பவானிசாகர் அணையின் நீர்மட்டம், 83.60 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, 6,120 கனஅடி தண்ணீர் வரத்தானது. அணையில் இருந்து பவானி ஆற்றிலும், கீழ்பவானி வாய்க்காலிலும், தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டுள்ளது. கடந்த ஆண்டு அக்., 30ம் தேதி, அணையின் நீர்மட்டம், 70.49 அடியாக இருந்தது. கடந்த ஆண்டை காட்டிலும், தற்போது, 13 அடி தண்ணீர் அதிகமாக உள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.தொடர் மழையால், பவானி மற்றும் கீழ்ப வானி வாய்க்காலில், அதிக அளவில் தண்ணீர் செல்கிறது.

இத்தண்ணீர் அளவு குறைந்த பின், பவானிசாகர் அணை யில் இருந்து நீர் திறக்கப் படும், என பொதுப்ப ணித்துறையினர் தெரிவித்தனர்.

**<u>பார்வையாளர்களை மகிழ்வித்த மலர்களில் இருந்து விதைகள்</u>**

ஊட்டி : ஊட்டி தாவரவியல் பூங்காவில், பார்வையாளர்களை மகிழ்வித்த மலர்களில் இருந்து விதைகள், விற்பனைக்கு தயாராகி வருகின்றன. ஊட்டி தாவரவியல் பூங்காவில், 3 லட்சத்துக்கும் மேற்பட்ட பல வண்ண மலர் செடிகள் உள்ளன. இரு மாதங்களாக பார்வையாளர்களை மகிழ்வித்த சால்வியா, காஸ்மாஸ், ஜின்யா, பெல்ஜினியம் உட்பட பல வண்ணங்களை கொண்ட மலர்கள், தற்போது காய்ந்திருப்பதால், அவற்றில் இருந்து விதை சேகரிக்கும் பணியில் தோட்டக்கலை ஊழியர்கள் ஈடுபட்டுள்ளனர். தோட்டக்கலை துறை துணை இயக்குனர் மணி கூறுகையில், “சேகரிக் கப்படும் விதைகள், அடுத்தாண்டு ஏப்ரல், மே மாதங்களில், கோடை சீசன் சமயத்தில், மலர் செடிகளை வளர்க்க பயன்படுத்தப்படும்; எஞ்சிய விதைகள், பாக்கெட் 10 ரூபாய் வீதம் சுற்றுலா பயணிகளுக்கு வழங்கப்படும்,” என்றார்.

**<u>குளித்தலையில் அதிக மழை</u>**

கரூர்: கரூர் மாவட்டத்திலேயே குளித்தலையில், அதிக மழை பதிவாகியுள்ளது. கரூர் மாவட்டத்தில், நேற்றுமுன்தினம் காலை, 8 மணி முதல் நேற்று காலை, 8 மணி நிலவரப்படி பெய்த மழை: அரவக்குறிச்சியில், 0.80 மி.மீட்டர் மழைப்பதிவானது. அதே போல், க.பரமத்தியில், 0.80 மி.மீ., குளித்தலையில், 20.40 மி.மீ., மாயனூரில், 1 மி.மீ., அணைப்பாளையத்தில், 20 மி.மீ., தோகைமலையில், 4 மி.மீ., பஞ்சப்பட்டியில், 1.20 மி.மீ., கிருஷ்ணராயபுரத்தில் 2 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. கரூர் மாவட்டம் முழுவதும் மொத்தம், 50.20 மி.மீ., மழைப்பதிவாகி உள்ளது. சராசரியாக, 4.18 மி.மீட்டர் பெய்துள்ளது.

# <u>நெல் வயல்களில் களை எடுக்கும் பணி தீவிரம்</u>

குளித்தலை: குளித்தலை அருகே தோகைமலை பகுதியில், நடவு செய்த நெல் வயல்களில், களை எடுக்கும் பணி தீவிரமாக நடக்கிறது. கரூர் மாவட்டம், தோகைமலை யூனியன் பகுதிகளான நெய்தலூர், சேப்ளாபபட்டி, ஆர்ச்சம்பட்டி மற்றும் நங்கவரம், நச்சலூர் பகுதியில், 5,000க்கும் மேற்பட்ட ஏக்கரில், சம்பா பருவத்தில் நெல் சாகுபடி செய்யதுள்ளனர். கடந்த சில ஆண்டுகளாக மழை இல்லாமல், கால்வாயில் தண்ணீர் வராமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். தண்ணீர் இல்லாததால், விவசாயத் தொழிலை விடும் நிலைக்கு தள்ளப்பட்டனர். மழை இல்லாமல் பல்வேறு மாவட்டங்களுக்கு கூலித்தொழிலாளர்கள் குடி பெயர்ந்துள்ளனர். நடப்பாண்டு வடக்கிழக்கு பருவமழை துவங்கி, மழை பெய்து வருவதாலும், வாய்க்கால்களில் நீர் வரத்து இருப்பதாலும், விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தொழிலை துவங்கினர். சம்பா பருவத்தில், நெல் சாகுபடியில் மும்முரமாக ஈடுபட்டுள்ள நிலையில், கூலித்தொழிலாளர்கள் பற்றாகுறையால், விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். தோகைமலை சுற்று வட்டாரத்தில், வெளியூர் ஆட்களை வரவழைத்து, விவசாய பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. கூலி ஆட்கள் பற்றாகுறையால், இயந்திரங்கள் மூலம் களை எடுக்க பயன்படுத்தப்படுகிறது. ஆனால், இயந்திரம் மூலம் நடவு செய்த, வயல்களில் மட்டும், களை எடுக்க பயன்படுத்த முடியும் என்பதால், மற்ற வயல்களில் களை எடுக்க முடியவில்லை. கூலி ஆட்களை நம்பியே, மற்ற விவசாயிகள் உள்ளனர்.

## <u>அமராவதியில் வந்த வெள்ள நீர் மாயனூரில் 1.5 டி.எம்.சி., தேக்கம்</u>

லாலாபேட்டை: அமராவதி ஆற்றில் வந்த வெள்ள நீரை பயன்படுத்தி, கிருஷ்ணராயபுரம் மாயனூர் தடுப்பணையில், 1.5 டி.எம்.சி., தண்ணீர் தேக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் திட்டமான நதிகளை இணைக்கும் திட்டத்தில், கடந்த ஆட்சியின் போது, 234 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாயனூர் அருகே காவிரியின் குறுக்கே தடுப்பணை கட்டும் திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன்படி, 2.5 டி.எம்.சி., வரை தண்ணீர் தேக்கும் அளவுக்கு மாயனூர் தடுப்பணை கட்டி முடிக்கப்பட்டது. தற்போது அமராவதியில் இருந்து பெருக்கெடுத்து வந்த வெள்ள நீரால், முதல் முறையாக, தடுப்பணையில், 1.5 டி.எம்.சி., தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், கரூர் மற்றும் திருச்சி மாவட்டத்தை உள்ளடக்கிய, 60 ஆயிரம் ஹெக்டேருக்கும் மேற்பட்ட விளைநிலங்களுக்கு தண்ணீர் சிரமமின்றி பகிர்ந்தளிக்கப்படும். மேலும், மாயனூர் சுற்றியுள்ள கிராமங்களில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்துள்ளதால், குடிநீர் பற்றாக்குறை நீங்க வாய்ப்புள்ளது. விவசாய பணிகளுக்கு தேவையான வகையில், புதிய கட்டளை வாய்க்கால், மேட்டு வாய்க்கால், தென்கரை வாய்க்கால்களில் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. மாயனூர் தடுப்பணைக்கு தொடர்ந்து தண்ணீர் வந்து கொண்டிருப்பதால், தேக்கி வைக்கப்பட்ட, 1.5 டி.எம்.சி., தண்ணீரைத் தவிர, மற்ற நீர், ஏழு கண் மதகு வழியாக காவிரியில் திறந்து விடப்படுகிறது. இந்த நீர் நேரடியாக, திருச்சி மாவட்டம் முக்கொம்பு சென்றடைகிறது. தடுப்பணை திட்டத்தின் மூலம், பல்வேறு விவசாயிகளுக்கு

நன்மைபயக்கும் வகையில் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## நெல் நடவு பணி தீவிரம்

லாலாபேட்டை: கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் அடுத்துள்ள ரெங்கநாதபுரம் பஞ்.,க்கு உட்பட்ட வீரராக்கியம் பகுதியில், 1,500க்கும் மேற்பட்ட விவசாய நிலங்களில் சம்பா சாகுபடி நெல் நடவுப்பணி நடந்து வருகிறது. நெல் நடவுப்பணிக்கு முன்பாக நிலங்களை சமன்படுத்து வதற்காக, எருதுகளை பூட்டி நிலம் சமன்படுத்தும் பணியில் உழவர்கள் ஈடுபட்டுள்ளனர். இந்த பகுதிக்கு, அமராவதி வழியாக வரும் பாசன தண்ணீர் சணப்பிரட்டி அருகே தடை ஏற்பட்டுள்ளதால், நிலத்தடி நீர் கொண்டும், மழைநீரைக் கொண்டும், இந்த பகுதியில் நெல் விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. "தொடர்ந்து விவசாயம் செய்ய ஏதுவாக, பாசன கிளை வாய்க்கால்களை தூர்வாருவதற்குநடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று, அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோமாரி நோய் தடுப்பு ஊசி போட வலியுறுத்தல்

க.பரமத்தி: கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய் தடுப்பு முறைகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என, க.பரமத்தி கால்நடை டாக்டர் தமிழரசன், கேட்டுக் கொண்டுள்ளார். அவர் கூறியதாவது: க.பரமத்தி யூனியனில், ஏராளமானோர் கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். மழை காரணமாக, மேய்ச்சல் நிலங்களில் தண்ணீர் தேங்கி உள்ளது. கால்நடைகள் உணவு, உட்கொள்வதில் சிரமம் ஏற்படும், கிருமி தாக்கி, ஒரு விலங்கில் இருந்து மற்றொரு விலங்குக்கு, நோய் பரவ வாய்ப்பு உள்ளது. கால்நடைகளுக்கு, முன் எச்சரிக்கையாக கோமாரி நோய் தடுப்பூசி போட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

## குடகனாறு அணை பகுதிக்கு தண்ணீர் வரத்து துவங்கியது

குஜிலியம்பாறை : அழகாபுரி அணைக்கு இதுவரை தண்ணீர் வராத நிலையில் தற்போது பெய்துள்ள மழையால் 14 அடி தண்ணீர் வந்துள்ளது. வேடசந்துார் அருகே உள்ள அழகாபுரியில் குடகனாறு அணை உள்ளது. 27 அடி கொள்ளளவு கொண்டது. இரண்டு கிளை வாய்க்கால்கள் மூலம் 9 ஆயிரம் ஏக்கர் பரப்பளவு நிலம் கரூர், திண்டுக்கல் மாவட்டங்களில் பாசன வசதி பெறுகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய பருவ மழை இல்லாததால் அணை வறண்டு கிடந்தது.நடப்பு பருவத்தில் மழை பெய்து தென் பகுதியில் உள்ள அணைகள் எல்லாம் நிரம்பிய நிலையில் தற்போது தான் அழகாபுரி அணைக்கு நீர் வரத்து வர துவங்கியுள்ளது. கடந்த இரண்டு நாட்களாக பெய்த மழையின் பயனாக தற்போது அணைக்கு 14 அடி தண்ணீர் வந்துள்ளது. மக்களின் குடிநீர், விவசாய நலன் கருதி 27 அடி முழு கொள்ளளவு வரை தண்ணீரை தேக்கி வைக்க வேண்டுமென விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## 10 ஆண்டுகளுக்கு பின் நிரம்பிய மீனாட்சியம்மன் கண்மாய்

போடி : போடி பகுதியில் பெய்த தொடர் மழையால் பத்து ஆண்டுகளுக்கு பின் மீனாட்சியம்மன் கண்மாய் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கொட்டகுடி ஆற்றில் இருந்து வரும் தண்ணீரானது போடி அருகே உள்ள பங்காருசாமி கண்மாய், சங்கரப்பன் கண்மாய், மீனாட்சிபுரத்தில் உள்ள மீனாட்சியம்மன் கண்மாய் நிறைந்து கடல் போல காட்சியளிக்கிறது. மீனாட்சியம்மன் கண்மாய் 100 ஏக்கர் பரப்பளவு கொண்டதாகும். இந்த கண்மாயில் தண்ணீர் தேங்குவதன் மூலம் சுந்தரராஜபுரம், விசுவாசபுரம், அம்மாபட்டி, பெருமாள்கவுண்டன்பட்டி, பத்ரகாளிபுரம், மீனாட்சிபுரம், காமராஜபுரம் உள்ளிட்ட கிராமங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் பெருகுவதோடு, 450 ஏக்கருக்கு மேல் பாசன வசதி

பெறும் வகையில் உள்ளது. மேலும் 10க்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மூன்றாண்டுகளுக்கு குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாத நிலை ஏற்பட்டுள்ளது. கடல் போல தேங்கியுள்ள மீனாட்சியம்மன் கண்மாயில் கழிவுப் பொருட்கள் தேங்கியுள்ளதால் கழிவுநீர் செல்ல வழியின்றி தண்ணீர் தேங்கி துர்நாற்றம் வீசுகிறது. கொசுத்தொல்லை அதிகரித்து பொதுமக்களுக்கு பல்வேறு வகையில் சுகாதாரக் கேடு ஏற்படுகிறது. மீனாட்சியம்மன் கண்மாயை தூர் வாருவதோடு கண்மாயில் தேங்கியுள்ள பிளாஸ்டிக் கழிவு பொருட்களை அகற்ற பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## விவசாயிகள் கூட்டம்

தேவகோட்டை : தேவகோட்டை காரைக்குடி பகுதி விவசாயிகள் சங்கக் கூட்டம் கிராம விவசாயிகள் சங்க மாநிலசெயலாளர் வக்கீல் ராஜ பாண்டியன் தலைமையில் நடந்தது. கூட்டத்தில், உரவிலையை கட்டுப்படுத்தி விவசாயிகளுக்கு அரசு நிர்ணயித்த விலையில் விற்க நடவடிக்கை எடுக்கவேண்டும். உரவியாபாரிகள் அரசு விலையில் விற்பதை அரசு அலுவலர் கண்காணிக்கவேண்டும். கடந்தாண்டு 80 சதவிகிதம் வறட்சி எனும் அறிவித்த நிலையில், சில மாதங்களுக்கு நடந்த குறைதீர் கூட்டத்தில் கலெக்டர் இழப்பீடு பெற்று தர நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தும் இது வரை எந்த வித பயனும் இல்லை. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கக் கோரி கோர்ட்டில் வழக்கு தொடர முடிவு செய்துள்ளதாக முடிவு செய்யப்பட்டது. முன்னாள் ஊராட்சிதலைவர்கள் சந்திரபோஸ், சிமியோன், மற்றும் நிர்வாகிகள் பங்கேற்றனர். சாக்கோட்டை பகுதிபொறுப்பாளர் பெரியசாமி நன்றி கூறினார்.

## வெம்பக்கோட்டையில் 82.2 மி.மீ., மழை பதிவு

விருதுநகர் : விருதுநகர்மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்துவருகிறது. நேற்று காலை 8.30 மணிப்படி(மி.மீ.,) அருப்புக்

கோட்டையில் 5, சாத்தூரில் 32, ஸ்ரீவி.,யில் 40, சிவகாசியில் 29, விருதுநகரில் 22, ராஜபாளையத்தில் 11, காரியாபட்டியில் 8.8, பிளவக்கல்லில் 32, வெம்பக்கோட்டையில் 82.2, கோவிலாறில் 12.2 மழை பதிவாகியது. 14 மீட்டர் உயரமுள்ள பெரியாறு அணை நீர்மட்டம் 12.03 , 13 மீட்டர் உயரமுள்ள கோவிலாறு அணை நீர்மட்டம் 8 அடியாக உள்ளது.

**4 அணைகள் பாசனத்திற்கு திறப்பு; 32 ஆயிரம் ஏக்கரில் நெல் சாகுபடி**

திருநெல்வேலி : நெல்லையில் விவசாயத்திற்காக நான்கு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டன. திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்துவருகிறது. ராமநதிஅணை, கடனாநதி அணை, அடவிநயினார்அணை, கருப்பாநதிஅணை ஆகியன நிரம்பி விட்டன. இதனால் அணைகள் நேற்று நெல்சாகுபடி பாசனத்திற்காக திறந்துவிடப்பட்டது. 81.50 அடிகொண்ட ராமநதியில் இருந்து வினாடிக்கு 60 கனஅடி வீதமும், கடனாவில் இருந்து வினாடிக்கு 125 கனஅடி வீதமும், அடவிநயினாரில் இருந்து 40கனஅடி வீதமும், கருப்பாநதியில் இருந்து 25 கனஅடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. இதன் மூலம் அம்பாசமுத்திரம், தென்காசி, கடையநல்லூர் பகுதியில் 32 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசன வசதிபெறுகிறது. நேற்று முதல் நெல்சாகுபடி முடியும் வரையிலும் 2015 மார்ச் வரையிலும் தண்ணீர் திறந்துவிடப்படும் என சிற்றாறு செயற்பொறியாளர் நிர்மலன் கிறிஸ்துதாஸ் தெரிவித்தார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ஒகேனக்கல்லில் 38.3 மி.மீ. மழை**

பாலக்கோடு, :வடகிழக்கு பருவமழையால் தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினமும் மாவட்டத்தின் பெரும்பாலான இடங்களில் பரவலாக மழை பெய்தது. நேற்று காலை 8 மணி வரை மாவட்டத்தில் பெய்த மழை அளவு(மில்லி மீட்டரில்) வருமாறு: பாலக்கோடு- 2.3, மாரண்டஅள்ளி- 8, தர்மபுரி- 43, பென்னாகரம்- 36, அரூர்- 6.2, பாப்பிரெட்டிப்பட்டி- 9.1, ஒகேனக்கல்- 38.3, கலெக்ட்ரேட்- 32 மிமீ. வெள்ள பாதிப்பு ஏற்பட்ட பஞ்சப்பள்ளி பகுதியில் நேற்று முன்தினம் மழை பெய்யவில்லை. கடந்த 27ம் தேதி அப்பகுதியில் 100 மி.மீ. மழை பெய்தது குறிப்பிடத்தக்கது.

**உச்சத்தில் கேரட், பீன்ஸ் விலை**

கோவை: நீலகிரி மாவட்டத்தில் தொடர் மழையால் கேரட், பீன்ஸ் விளைச்சல் பாதிக்கப்பட்டது. இதனால் கோவையில் விலை உயர்ந்தது. கோவை மாவட்டத்தில் நாச்சிபாளையம், வழுக்குப்பாறை, மதுக்கரை, செட்டிபாளையம், கிணத்துக்கடவு வட்டாரத்தில் தக்காளி சாகுபடி அதிகமாக நடக்கிறது. சாகுபடி அதிகரித்த போதும், மழையின் காரணமாக தக்காளி அறுவடைக்கு முன்பே தோட்டத்தில் வீணாகி வருகிறது. 10 முதல் 20 சதவீதம் தக்காளி தோட்டங்களில் நாசமாகி வருவதாக தெரிகிறது.

சந்தைகளில் போதுமான விலை கிடைக்காத நிலையில், விவசாயிகள் சிலர் தோட்டங்களில் தக்காளி அறுவடை செய்யாமல் அப்படியே விட்டு விட்டனர். தக்காளி விளைச்சல் அபரிமிதமாக இருந்த போதிலும், கடைகளில் தக்காளி கிலோ 12 ரூபாய் முதல் 18 ரூபாய் வரை விற்கப்படுகிறது. தக்காளி அறுவடை, மார்க்கெட், கடைகளுக்கு கொண்டு வருவதற்கான போக்குவரத்து வகையில் செலவு அதிகமாக இருப்பதால் தக்காளி விலை உயர்ந்து வருவதாக தெரிகிறது. மாவட்ட அளவில் கேரட் விலை கிலோ 35 ரூபாய் முதல் 45 ரூபாய் வரை இருந்தது. கடந்த சில நாட்களாக விலை கிலோவிற்கு 55 ரூபாய் முதல் 65 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. பீன்ஸ் விலையும் 40 ரூபாயிலிருந்து 60 ரூபாயாக அதிகரித்துள்ளது. நீலகிரி, குன்னூரில் மழையின் காரணமாக கேரட், பீன்ஸ் சாகுபடி வெகுவாக குறைந்து விட்டதாக தெரிகிறது. 20 சதவீத கேரட், பீன்ஸ் போன்றவை மழையால் சேதமாகி விட்டதாக கூறப்படுகிறது. பற்றாக்குறை அதிகரிப்பினால் கேரட், பீன்ஸ் விலை உச்சத்தில் இருக்கிறது.

## <u>அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது பாபநாசம் அணை 104 அடியாக உயர்வு</u>

நெல்லை, : மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதிகளில் மழை குறைவால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் இருந்து அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. பாபநாசம் அணையின் நீர்மட்டம் 104 அடியாக உயர்ந்துள்ளது. நெல்லை மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை ஒரு வாரம் பெய்தது. இதனால் அனைத்து அணைகளுக்கும் நீர்வரத்து அதிகரித்தது. இந்நிலையில் கடந்த ஒரு வாரமாக மலைப்பகுதிகளில் மழை குறைந்துள்ளது. இதனால் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் இருந்து அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது.

இதையடுத்து 10 நாட்களுக்கும் மேலாக மூடப்பட்டிருந்த பாபநாசம் அணை நேற்று திறக்கப்பட்டது. பாபநாசம் அணையில் 103.25 அடியாக இருந்த நீர்மட்டம் மேலும் ஒரு அடி உயர்ந்து 104.70 அடியானது. அணைக்கு விநாடிக்கு 657 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து விநாடிக்கு 104 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. சேர்வலாறு அணையில் 117.98 அடியாக இருந்த நீர்மட்டம் லேசாக உயர்ந்து 118.50 அடியானது. மணிமுததாறு அணையில 76.10 அடியாக இருந்த நீர்மட்டம் லேசாக உயர்ந்து 76.45 அடியானது. அணைக்கு விநாடிக்கு 284 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. அணையில் இருந்து விநாடிக்கு 25 கன அடி தண்ணீர் திறக்கப்படுக�றது. நெல்லை மாவட்டத்தை பொறுத்தவரை ஆயக்குடியில் 10.6 மிமீ, சங்கரன்கோவிலில் 30 மிமீ, செங்கோட்டையில் 14.2 மிமீ, சிவகிரியில் 31 மிமீ, தென்காசியில் 10.6 மிமீ, ஆலங்குளத்தில் 5.2 மிமீ, வீ.கே.புதூரில் 3 மிமீ மழை பதிவாகியுள்ளது. வடகிழக்கு பருவமழை காலத்தில் தான் நெல்லை, தூத்துக்குடி மாவட்டங்களுக்கு அதிக மழை கிடைக்கும். இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை குறித்த காலத்தில் துவங்கியுள்ளது. ஓரளவு நல்ல மழையும் பெய்துள்ளது. எனினும் இந்த மழை நவம்பர் மாதத்திலும் தொடர்ந்தால் மட்டுமே பாபநாசம், மணிமுத்தாறு அணைகள் நிரம்பும். பிசான நெல் பருவ சாகுபடிக்கு பாபநாசம் அணையில் இருந்து தண்ணீர் திறக்க முடியும். எனவே மழை தொடர வேண்டும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

**<u>ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் ரூ.1.33 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்</u>**

பொள்ளாச்சி : பொள்ளாச்சியை அடுத்த நெகமம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில், நேற்று கொப்பரை ஏலம் நடைபெற் றது. இதில் 11 விவசாயிகள்

மொத்தம் 28 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர். இதில் 10 மூட்டை முதல் தர கொப்பரையாகவும், 18 மூட்டை இரண்டாறம் தர கொப்பரையாகவும் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டது. முதல் தர கொப்பரை ஒரு கிலோ ரூ.90.35 முதல் ரு.97 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ஒரு கிலோ ரூ.41.35 முதல் ரூ.90.30 வரை ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த ஒன்றரை டன் கொப்பரை ரூ.1.33 லட்சத்துக்கு ஏலம் போனது. அதனை 3 வியாபாரிகள் கொள்முதல் செய்தனர். கடந்த வாரத்தை விட இந்த வாரம் கொப்பரை வரத்து குறைவாக இருந்தது. மேலும், கிலோவிற்கு ரூ.5 முதல் ரூ.8 வரை குறைவான விலைக்கே ஏலம் போனது என்று, ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் செல்வராஜ் தெரிவித்தார்.

**<u>மாவட்டத்தில் குறைகிறது பருவமழை தண்ணீர் நிறுத்தம் தொடர்வதால் பவானிசாகர் நீர்மட்டம் உயர்கிறது</u>**

ஈரோடு : வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததை அடுத்து ஈரோடு மாவட்டத்தில் கடந்த 2 வாரமாக தொடர் மழை பெய்து வந்தது. இந்நிலையில் நேற்று மாவட்டத்தில் மழையின் வேகம் சற்று தணிந்து காணப்பட்டது. ஈரோடு மாநகரில் நேற்று மழை பெய்யவில்லை. இருப்பினும், பெரும்பாலான தடுப்பணைகளும், குளம், ஏரிகள் நிரம்பி வழிகின்றன. குறிப்பாக சூரம்பட்டி அணைக்கட்டு பகுதியில் மழைநீர் நிரம்பி நுங்கும், நுரையுமாக வெளியேறுகிறது. இதேபோல ஓடைகளிலும் மழைநீர் தொடர்ந்து ஓடி கொண்டிருக்கிறது. புறநகர்ப்பகுதியில் குறிப்பாக ரங்கம்பாளையம், கே.கே.நகர் ரயில்வே நுழைவு பாலத்தில் மழைநீர் வெள்ளமாய் பெருக்கெடுத்து ஓடுகிறது. மூலக்கரை தரைமட்டப்பாலம், ரங்கம்பாளையம் ரயில்வே நுழைவு பாலம், கவுண்டச்சிபாளையம்

பகுதியிலுள்ள தரைமட்டப்பாலங்களிலும் இன்னும் மழைநீர் முழுமையாக வடியவில்லை. இருப்பினும் தரைமட்டப்பாலத்தில் ஓடும் தண்ணீரால் போக்குவரத்துக்கு பாதிப்பு ஏற்படவில்லை. காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்துக்குட்பட்ட பகுதியில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ள சம்பா நெற்பயிர் மழை காரணமாக சாய்ந்து கிடக்கிறது. இருப்பினும், பெரிய அளவில் இப்பயிர்களுக்கு பாதிப்பு ஏற்படவில்லை. அதேசமயம் கோபி, சத்தியமங்கலம், அந்தியூர், அத்தாணி போன்ற பகுதிகளில் மழைநீர் நெல் வயல்களில் புகுந்து விட்டதால் அறுவடைக்கு தயார் நிலையில் இருந்த நெற்கதிர்களில் தற்போது முளை விடத்துவங்கி விட்டது. மேலும் அறுவடை செய்த நெல்மணிகளில் அதிக ஈரப்பதம் உள்ளதால் அவற்றை வாங்க தனியார் மற்றும் அரசு நெல் கொள்முதல் மையங்களும் தயங்குவதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர். பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதியிலும் மழைப்பொழிவு குறைந்து விட்டதால் அணைக்கு 10 ஆயிரம் கனஅடியாக இருந்த நீர்வரத்து நேற்று காலை 6190 கனஅடியாக குறைந்து விட்டது. அதேசமயம் நேற்று முன்தினம் 82 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் 83.55 அடியாக உயர்ந்துள்ளது. பவானி ஆற்றிலும், கீழ்பவானி வாய்க்காலிலும் தண்ணீர் முற்றிலுமாக நிறுத்தப்பட்டு விட்டதால் அணையின் நீர்மட்டம் மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. நேற்று முன்தினம் மாவட்டத்திலேயே அதிகளவாக ஓலப்பாளையத்தில் 22 மில்லி மீட்டர் மழைப்பதிவானது. நேற்று காலை 8 மணி வரை பதிவான மழையளவு (மில்லி மீட்டரில்) வருமாறு: ஒரத்துப்பாளையம்& 5, பெருந்துறை& 16, பவானி& 1.8, ஓலப்பாளையம் &22, சென்னிமலை&3, மங்கலப்பட்டி&3, காங்கயம்& 5 மில்லி மீட்டர்.

## தொடர் மழையால் உயரும் நீர்மட்டம் : இரண்டாம் போக நடவுப்பணி ஆரம்பம்

கம்பம்: நீர்ப்பிடிப்பு பகுதிகளில், தொடர்ந்து பெய்து வரும் மழையால், பெரியாறு அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதனால், கம்பம் பகுதியில் இரண்டாம் போக நடவுப்பணி ஆரம்பமாகியுள்ளது. பாசனத்திற்கு தங்குதடையின்றி தண்ணீர் கிடைக்கும் என்பதால், விவசாயிகள் உற்சாகத்தில் உள்ளனர். கம்பம் பள்ளத்தாக்கில், லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை இருபோக நெல்சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த சில தினங்களாக ஆங்கூர்பாளையம், சாமாண்டிபுரம், குள்ளப்ப கவுண்டன்பட்டி, சுருளிப்பட்டி, நாராயணத்தேவன்பட்டி, காமய கவுண்டன்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் முதல் போக நெல் அறுவடை பணி இன்னும் ஒரு சில தினங்களில் முடிவடையும் நிலையில் உள்ளது. இந்நிலையில், விவசாயிகள் இரண்டாம் போக நடவுப்பணிக்கு தயாராகி வருகின்றனர். இதற்காக வயல் வெளிகளில் நாற்றாங்கால் அமைத்து நாற்றுகளை வளர்த்து வருகின்றனர். கடந்த சில தினங்களாக கம்பம் மற்றும் பெரியாறு அணை பகுதிகளில் தொடர் மழை பெய்து வருவதால், அணையில் நீர்மட்டம் படிப்படியாக உயர்ந்து வருகிறது. இதனால், பாசனத்திற்கு தண்ணீர் தங்கு தடையின்றி கிடைக்கும் என விவசாயிகள் உற்சாகத்தில் உள்ளனர். இதுகுறித்து விவசாயிகள் கூறுகையில், கடந்த ஆண்டு போதிய மழை இல்லாததால், இரண்டாம் போக நெற்பயிர்கள் பதராகி பெரும் நஷ்டம் ஏற்பட்டது. ஆனால், இம்முறை தொடர் மழை காரணமாக பாசனத்திற்கு போதுமான அளவு தண்ணீர் கிடைத்துள்ளது. ஆங்கூர்பாளையம், சாமாண்டிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் முதல் போக நெல் அறுவடை பணி முடிந்து இரண்டாம் போக நெல் நடவுப்பணி மேற்

கொள்ளப்பட்டு வருகிறது. காமயகவுண்டன்பட்டி, ஏழரசுகளம், ஊமையன் வாய்க்கால் உள்ளிட்ட பகுதிகளில் விவசாயிகள் நாற்றாங்கால் அமைத்து நாற்றுகளை வளர்த்து வருகின்றனர். இன்னும் சில தினங்களில் நடவுப்பணி மேற்கொள்ளப்பட உள்ளது என்றனர்.

## சாத்தூர் பகுதிகளில் மானாவாரி விவசாய பணிகள் தீவிரம்

சாத்தூர்: வடகிழக்கு பருவ மழையால் சாத்தூர், சுற்றுப்பகுதிகளில் மானாவாரி விவசாய பணி கள் தீவிரமாக நடை பெற்று வருகின்றன. தமிழகத்தில் டெல்டா மாவட்டங்களை தவிர்த்து மற்ற 22 மாவட்டங்களில் நவதானிய பயிர்கள் சாகு படி செய்யப்பட்டு வருகின் றன. விருதுநகர் மாவட்டத் தில் சாத்தூர் உட்கோட்டத் தில் சுமார் 8ஆயிரத்து 200 ஹெக்டர் மானாவாரி விளைநிலங்கள் உள்ளன. இந்த விளை நிலங்களில் ஆண்டுதோறும் பருவ மழையை எதிர்பார்த்து மானாவாரி பயிர்கள் பயிரிடுவது வழக்கம். கடந்த மூன்று ஆண்டுகளாக பருவமழை பொய்த்ததன் காரணமாக மானாவாரி விவசாயமும் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்நிலையில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை நன்றாக பெய்து வரு வதால் மானாவாரி காடு களில் பயிர்கள் பயிரிடும் பணியில் விவசாயிகள் தீவி ரமாக ஈடுபட்டுள்ளனர். கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட நஷ்டத்தை இந்த ஆண்டு ஈடுகட்டி விடலாம் என்று விவசாயி கள் ஆர்வமுடன் விவசாய பணியில் ஈடுபட்டுள்ளளர். மானாவாரி காடுகளில் சோளம், கம்பு, பாசிப்பயிறு, மக்காச்சோளம், செஞ்சோளம், பருத்தி போன்ற நவாதனிய பயிர்கள் பயிரிடப்பட்டு வருகின்றன. சாத்தூர் பகுதிகளில் போத்திரேட்டிபட்டி, ஓ.மே ட்டுப்பட்டி, ஒத்தையால், கரிசல்பட்டி, கண்மாய்சூரங்குடி உட்பட பல்வேறு கிராமங்களில் உள்ள மானா வாரி காடு களில் நவதானிய பயிர்கள் பயிரிடப்பட்டுள் ளன. 8ஆயிரத்து 200ஹெக் டர் மானாவாரி விளைநிலங்கள் இருந்த போதிலும் சுமார் 4ஆயிரம் ஹெக்டர்

விளைநிலங்களில் மட்டுமே பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன. தொடர்ந்து மழை பெய்தால் மட்டுமே அனை த்து மானாவாரி காடுகளிலும் பயிர்கள் பயிரிட முடியும் என்று விவசாயிகள் தெரிவித்தனர். மானாவாரி பயிர்களு க்கு கடந்த காலங்களில் இயற்கை உரங்களை பயன்படுத்திய விவசாயிகள், தற்போது சூழ்நிலை மாற் றம் காரணமாக செயற்கை உரங்களை பயன்படுத்தி வருகின்றனர். சாத்தூர் வேளாண்மை உதவி இயக்குநர் சக்கரவர்த்தி கூறுகையில், இந்த ஆண்டு வடகிழக்கு பருவ மழை சராசரி அளவைவிட கூடுதலாக பெய்துள்ளது. சாத்தூர் வட்டாரத்தில் 800 ஹெக்டர் மட்டுமே நெல் சாகுபடி நடை பெறும். தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவமழையால் மானாவாரி பயிர்கள் நன்றாக வளர்ந்து வருகின் றன. விவசாயிகள் மானா வாரி விளைச்சல் குறித்து தகவல் பெற சாத்தூர் வேளாண்மை அலுவலகத்தை தொடர்பு கொண்டு பயன்பெறலாம் என்று கூறினார்.

## <u>ராஜபாளையம் பகுதியில் கண்மாய்கள் நிரம்பின விவசாய பணிகள் தீவிரம்</u>

ராஜபாளையம்: தொடர் மழையால் ராஜபாளையத்தில் புதுக்குளம், ஆதியூர் கண்மாய்கள் நிறைந்து தண்ணீர் மறுகால் பாய்கிறது. இதனால், விவசாயிகள் நெல் சாகுபடி பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர். விருதுநகர் மாவட்டம் ராஜபாளையத்தில் கடந்த 4 ஆண்டுகளாக சரியாக மழை இல்லாமல் கண்மாய், குளங்கள் வறண்டு கிடந்தன. கடந்த சில நாட்களாக பெய்து வரும் மழையால் தற்போது கண்மாய், குளங்கள் நிரம்பி காணப்படுகின்றன. ராஜபாளையம் மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் தொடர்ந்து கன மழை பெய்து வருகிறது. இதனால் அய்யனார்கோயில், முடங்கியாறு ஆற்றில் தண்ணீர் வந்து கொண்டிருக்கின்றது. முடங்கி யாற்றில் கிராமப்பகுதி கண்மாய்களுக்கும், நகர்பகுதி கண்மாய்களுக்கும் விவசாய நிலங்களின் கணக்குப்படி தண்ணீர் பிரித்துவிடும் சமரணை

உள்ளது. இதன் மூலம் குத்தப்பஞ்ஞான் ஆறு வழியாக நகரின் முதல் கண்மாயான புதுக்குளம் கண்மாய்க்கு வந்து நிறைந்து, மறுகால் பாய்கிறது. இந்த உபரி தண்ணீர் பிரண்டைக்குளம் கண்மாய்க்கு சென்று சேர்கிறது. இதே போல் மேற்கு தொடர்ச்சி மலை பல்லிலிச்சான் மற்றும் மீன்முட்டி கணவாய் வழியாக அனத்தலை ஆறு, கல்லாறு வழியாக தண்ணீர் வருகின்றது. அனத்தலை பகுதியில் திருவில்லிபுத்தூர் பகுதி கண்மாய்களுக்கும் ராஜபாளையம் கண்மாய்களுக்கும் விளை நிலங்கள் அடிப்படையில் சமரணை உள்ளது. இதன் மூலம் ராஜபாளையம் முதல் கண்மாய் ஆதியூர் கண்மாய் நிறைந்து மட்டம் தட்டி மறுகால் பாய்கிறது. இந்த தண்ணீர் புளியங்குளம் கண்மாய்க்கு செல்கிறது. புளியங்குளம், பிரண்டைக்குளம் கண்மாய் நிறை ந்து, தென்காசி ரோட்டில் மாரியம்மன் கோயில் எதிரில் உள்ள கொண் டனேரி கண்மாய்க்கு தண்ணீர் செல்கிறது. இதையடுத்து மற்ற கண்மாய்களுக்கு தண்ணீர் சென்று சேரும். கண்மாய்கள் நிறைந்து காணப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இத னால் விவசாய பணிகளில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

## <u>கனமழை தொடர்கிறது நிரம்பியது ஊரணி உயருது நீர்மட்டம்</u>

சாத்தூர்: சாத்தூர் மற்றும் கிராமபுறங்களில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு பெய்த கனமழையால் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தண்ணீர் நிறைந்து காணப்படுகின்றது. விருதுநகர் மாவட்டத்தில் கடந்த மூன்று ஆண்டுகளாக பருவமழை பொய் த்து விட்டதால் நீர்பிடிப்பு பகுதிகள் வறண்ட நிலை யில் காணப்பட்டது. இந்நிலையில் கடந்த சில நாட்க ளாக பெய்துவரும் பருவ மழையால் பெரும்பாலான நகர் மற்றும் கிராம பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து வருகின்றது. குறிப்பாக சாத்தூர் கிராம பகுதியில் வடகிழக்கு பருவமழை நன்றாக பெய்து வருவதால் உப்பத்தூர், சங்கராபுரம், ஊமத்துவம்பட்டி. முத்தால்நாயக்கன்பட்டி, கீழஒட்டம்பட்டி, போத்திரெட்டி

பட்டி உட்பட பல்வேறு கிராமங்களில் உள்ள ஊரணிகளில் மழை நீர் நிறைந்து காணப்படுகின்றது. இந்நிலையில் சாத்தூரில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு 1 மணிக்கு இடியுடன் கன மழை பெய்தது. சுமார் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக பெய்த கனமழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர். கடந்த சில நாட்களாகவே மழை பெய்து வந்த நிலையில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு கனமழை பெய்த தால், மூன்று ஆண்டுகளாக வறண்டு கிடந்த நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கூட தண்ணீர் நிறைந்து காணப்பட்டது. ஊரணிகளில் மழைநீர் நிறைந்து காணப்படுவதால் தண்ணீர் பற்றாக்குறைக்கு தற்காலிக தீர்வு ஏற்பட்டுள்ளதாக கிராம மக்கள் நம்பி க்கை தெரிவித்தனர். இது ஒரு தற்காலிக தீர்வுதான் என்றும் வடகிழக்கு பருவ மழை கைகொடுத்தால் மட்டுமே கண்மாய்கள், அணைகள் நிறைந்து விவசாயம் செய்யக்கூடிய நிலை ஏற்படும் என்றும் கிராம மக்கள் தெரிவித்தனர்.

## <u>குமரியில் மழை நீடிப்பு மாம்பழத்துறையாறு அணை மீண்டும் நிரம்பியது</u>

நாகர்கோவில், : குமரி மாவட்டத்தில் மழை நீடித்து வரும் நிலையில் மாம்பழத்துறையாறு அணை மீண்டும் நிரம்பி மறுகால் பாய தொடங்கியுள்ளது.குமரி மாவட்டத்தில் தென்மேற்கு பருவமழையை தொடர்ந்து கடந்த சில நாட்களாக வடகிழக்கு பருவமழையும் பெய்து வருகிறது. மழை தீவிரமடையாதபோதிலும் தொடர் சாரல் மழையால் நீர்நிலைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 40 அடியை எட்டி வருகிறது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டமும் கணிசமாக உயர்ந்துள்ளது. நாகர்கோவில் நகருக்கு குடிநீர் வழங்கி வருகின்ற முக்கடல் அணை ஏற் கனவே நிரம்பி மறுகால் பாய்ந்து வருகிறது. மற் றொரு சிறிய அணையான மாம்பழத்துறையாறு அணையும் நிரம்பியுள்ளது. ஏற்கனவே தென்மேற்கு பருவமழை காலத்திலும் மாம்பழத்துறையாறு அணை நிரம்பி மறுகால் பாய்ந்து வந்தது. தற்போது

மீண்டும் அணை நிரம்பியுள்ளது. தற்போது பெருஞ்சாணி, சிற்றார்-1, மாம்பழத்துறையாறு ஆகிய அணைகளில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் நேற்றும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பல்வேறு இடங்களில் சாரல் மழை பெய்தது. நேற்று காலை வரை அதிகபட்சமாக சுருளோட்டில் 78.6 மி.மீ மழை பதிவாகி இருந்தது. பேச்சிப்பாறை 43.8, பெருஞ்சாணி 54.2, சிற்றார்-1 31, சிற்றார்-2ல் 44.6, பொய்கை 8.2, மாம்பழத்துறையாறு 4.5, நாகர்கோவில் 11.2, பூதப்பாண்டி 14.2, கன்னிமார் 19.2, ஆரல்வாய்மொழி 8.7, மயிலாடி 31.4, கொட்டாரம் 5.4, இரணியல் 7.2, ஆனைக்கிடங்கு 42, குருந்தன்கோடு 3.2 மி.மீட்டரும் மழை பதிவாகி இருந்தது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர்மட்டம் 39.85 அடியாக இருந்தது. அணைக்கு 689 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்தது. பெருஞ்சாணி நீர்மட்டம் 68.75 அடியாக இருந்தது. அணைக்கு 792 கன அடி தண்ணீர் வரத்து காணப்பட்டது. சிற்றார்-1ல் 16.63 அடியும், சிற்றார்-2ல் 16.73 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. சிற்றார்-1க்கு 261 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்த நிலையில் 200 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது. பொய்கையில் 8.10 அடியும், மாம்பழத்துறையாறு அணையில் 54.12 அடியும் நீர்மட்டம் காணப்படுகிறது. மாம்பழத்துறையாறு அணைக்கு 50 கன அடி தண்ணீர் வந்துகொண்டிருந்த நிலையில் 50 கன அடி தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளது.

## மரவள்ளியில் பூச்சி தாக்குதல் விவசாயிகளுக்கு விழிப்புணர்வு முகாம்

நெல்லிக்குப்பம்: நெல்லிக்குப்பம் அடுத்த மேல்பட்டாம்பாக்கம் மற்றும் சின்னபகண்டை கிராமங்களில், அண்ணாமலை பல்கலைக்கழக வேளாண்புலம் சார்பில் மரவள்ளி பயிரில் பூச்சி தாக்குதல் குறித்த விழிப்புணர்வு பயிற்சி முகாம் நடந்தது.பண்ருட்டி விவசாய சங்க தலைவர்

சேகர் தலைமை தாங்கினார். பல்கலைக்கழக மாணவர் குழு தலைவர் மதியழகன் வரவேற்றார். மரவள்ளி பயிர் விவசாயிகள் கலியபெருமாள், அழகர்சாமி, ரமணி, செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.கடலூர் கரும்பு ஆராய்ச்சி நிலைய பூச்சியியல் துறை பேராசிரியர் துரைசாமி மரவள்ளி கிழங்கு பயிரில் பூச்சி தாக்குதலை தடுக்கும் முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டது. நிகழ்ச்சியில் பயிற்சி மாணவர்கள் மணிவேல், முத்தரசு, மணிசங்கர், முத்துக்குமார், மதிவாணன், மணிவாசகம், மஞ்சு, மதன், மனோஜ், மன்னம் பாலகுரு மற்றும் விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மழைநீரில் நிரம்பி வரும் பண்ணைக்குட்டைகள் விவசாயம், மீன்வளர்ப்புக்கு பயனுள்ளதாக அமையும்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் மாவட்டத்தில் அமைக்கப்பட்ட பண்ணை க்குட்டைகள் மழை நீரில் நிரம்பி வருவதால் விவசா யம் மற்றும் மீன்வளர்ப்புக்கு பயனுள்ளதாக அமையும் என அதிகாரிகள் தெரிவித்தனர். ராமநாதபுரம் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை மூலமாக மாவட்டத்தில் 6 வட்டாரங்களில் 110 பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட்டும், 296 ஊரணிகள், 64 கண்மாய் கள் ஆழப்படுத்தும் பணி, 93 வரத்துக்கால்வாய்கள் தூர்வாரும் பணி என 560க்கும் மேற்பட்ட நீர்வள மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள் ளன. தற்போது பரவலாக மழை பெய்து வருவதால் மாவட்ட முகமை மூலம் அமைக்கப்பட்டுள்ள மழை நீர் சேகரிப்பு கட்டமைப்புகள் அனைத்தும் மழை நீரால் நிரம்பி உள்ளன. ஆர்.எஸ்.மங்கலம் வட் டாரம் ஊரணங்குடி கிராம நீர்வடிப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பண்ணைக்குட்டைகளை கலெக்டர் நந்தகுமார் நேற்று முன் தினம் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது பண்ணைக் குட்டைகளில் நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை யின் மூலம் பண்ணை

உற்ப த்தி மேம்பாட்டு திட்டத் தின் கீழ் விவசாயிகளுக்கு மீன் குஞ்சுகள் வழங்கி, அவற்றை வளர்ப்பதற்கான தொழில்நுட்ப உதவிகளை செய்ய அதிகாரிகளை உத்தரவிட்டார். ஊரணங்குடி கிராமத் தில் விவசாயிகளின் விருப்பத்திற்கிணங்க விவசாய நிலங்களில் 20க்கும் மேற்பட்ட பண்ணைக்குட்டை கள் தொகுப்பாக அமைக்கப்பட்டு அவை அனைத் தும் மழைநீரால் நிரம்பி உள்ளது. இப்பண்ணைக்குட்டைகளின் நீரானது பயிர் முதிர்ச்சிப்பருவத்தில் பருவ மழை பொய்த்துப்போகும் பட்சத் தின் பாசனம் செய்து, பயிர் சேதத்தை தவிர்க்கவும் இர ண்டாம் பயிர் மற்றும் பயறு வகை கள் பயிரிடுவதற்கும், மீன் குஞ்சு கள் வளர்த்து உபரி வருமானம் ஈட்டுவதற்கும் வசதியாக இருக்கும் என வேளாண்மைத்துறை அதிகாரி கள் தெரிவித்தனர். கலெக்டர் ஆய்வின் போது வேளாண்மை இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி, கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகராஜன் உடனிருந்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மழை பொழிவால் வரத்து அதிகரிக்கும்: “விலை குறையும் என்பதால் தேங்காயை உடனே விற்பது நல்லது”**



திண்டுக்கல், மழை பொழிவு அதிகமானதால் வரத்து அதிகரித்து விலை குறையும் வாய்ப்பு உள்ளதால் தேங்காய், கொப்பரையை உடனே விற்பது

நல்லது என வேளாண் வணிகத்துறை துணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

கம்புவிலைமுன்னறிவிப்பு

கம்பு, உலகின் முக்கிய உணவாகவும், கால்நடை தீவனமாகவும் உள்ளது. கம்பு உற்பத்தியில் இந்தியா முன்னணியில் உள்ளது. தானிய வகையில் அதிக வறட்சியை தாங்கும் தன்மை இந்த பயிருக்கு உள்ளது. இவற்றின் உற்பத்தி திறன் ஹெக்டேருக்கு 1,106 கிலோவாகும். தமிழ்நாட்டின் கம்பு சாகுபடி பரவலாக மே-ஜூன், அக்டோபர்- நவம்பர் ஆகிய பருவங்களில் அதிக அளவில் பயிரிடப்படுகிறது. கம்பு உற்பத்தியில் விழுப்புரம் மாவட்டம் 29,870 டன்கள் உற்பத்தியுடன் முன்னணி வகிக்கின்றது. திண்டுக்கல், தேனி உள்ளிட்ட மாவட்டங்களிலும் கம்பு அதிகளவு உற்பத்தி செய்யப்படுகிறது. கடந்த 11 வருடங்களில் விழுப்புரம் சந்தையில் நிலவிய விலை விவரங்கள் ஆய்வு மற்றும் பொருளாதார ஆய்வுகளின் அடிப்படையில் தற்சமயம் நடவு செய்யும் கம்புவிற்கு வரும் 2015-ம் ஆண்டு பிப்ரவரி-மார்ச் மாத அறுவடையின் போது குவிண்டாலுக்கு 1400 முதல் 1500 ரூபாய் வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டு உள்ளது. இதனடிப்படையில், விவசாயிகள் கம்பு பயிரிடலாம். தேங்காய் மற்றும் கொப்பரை இதே போல், இந்தியாவில் தோட்டப்பயிர்களில் தென்னை சாகுபடி 59 சதவீத பரப்பு பங்களிப்புடன் முக்கிய பங்கு வகிக்கிறது. தமிழ்நாட்டில் மொத்த தோட்டப்பயிர்களில் 73 சதவீத பரப்பில் தேங்காய் சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, தேங்காய் டன் ஒன்றுக்கு ரூ.27 ஆயிரத்து 800 வரை பண்ணை விலையாக பொள்ளாச்சி சந்தையில் விற்கப்படுகிறது. வர்த்தகர்களின் கூற்றுப்படி, வரும் பண்டிகை காலங்களில் தேங்காயின் உள்நாட்டு தேவை அதிகரிப்பினால் விலை நிலையாக இருக்கும். மேலும், பருவமழையால் எதிர்காலத்தில் தேங்காய் உற்பத்தி அதிகரிக்கும். தற்போது, கொப்பரை

கிலோவிற்கு ரூ.100-104 வரை அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் விற்கப்படுகிறது. விலை முன்னறிவிப்பு இந்த சூழலில் வருகின்ற மாதங்களில் தேங்காய் மற்றும் கொப்பரை விலை நிலை பற்றி விவசாயிகள் அறிந்து கொள்ள ஏதுவாக கடந்த 12 ஆண்டுகளாக பொள்ளாச்சி சந்தையில் நிலவிய தேங்காயின் விலை மற்றும் கடந்த 14 ஆண்டுகளாக அவல்பூந்துறையில் நிலவிய கொப்பரையின் விலையை உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தை தகவல் மையம் ஆராய்ந்துள்ளது. அதன் அடிப்படையில் பொள்ளாச்சி பகுதியில் தேங்காய் பண்ணை விலை நவம்பர், டிசம்பர் மாதங்களில் சராசரி காய் ஒன்றுக்கு ரூ.15 முதல் ரூ.17 வரையிலும், மற்ற சந்தைகளில் காய் ஒன்றுக்கு ரூ.1 முதல் 3 வரையிலும் குறைவாக இருக்கும். கொப்பரை விலை கிலோவிற்கு ரூ.101 முதல் ரூ.103 வரை இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே, விவசாயிகள் தேங்காய் மற்றும் கொப்பரையை உடனே விற்று பயன்பெறலாம். இந்த தகவலை திண்டுக்கல் மாவட்ட வேளாண்மை வணிகத்துறை துணை இயக்குனர் செல்வராஜ் தெரிவித்துள்ளார்.

## <u>வேடசந்தூர், குஜிலியம்பாறை பகுதிகளில் பலத்த மழையால் தடுப்பணை, குளங்கள் நிரம்பியது</u>



வேடசந்தூர, குஜிலியம்பாறை பகுதிகளில் பலத்த மழை பெய்ததால் தடுப்பணை, குளங்கள் நிரம்பின. தடுப்பணை நிரம்பியது திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் காமராஜர் அணை நிரம்பியதால் அங்கிருந்து தண்ணீர் வெளியேறி குடகனாறில் கலந்து வருகிறது. இதேபோன்று சிறுமலையில் பெய்த மழைநீரும் குடகனாறில் கலந்து வருகிறது. இதனால் வேடசந்தூர்

அருகே உள்ள லட்சுமணம்பட்டி தடுப்பணை நிரம்பி வழிகிறது. தடுப்பணையில் இருந்து வெளியேறும் தண்ணீர் அழகாபுரி குடகனாற்றில் சென்று கலக்கிறது. லட்சுமணம்பட்டி தடுப்பணையில் வெள்ளநீர் வழிந்தோடும் காட்சியை வேடசந்தூர் மற்றும் அதனைச்சுற்றியுள்ள கிராம மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து பார்த்துச் செல்கிறார்கள். சில வாலிபர்கள் ஆபத்தை உணராமல் தடுப்பணையின் உள்ளே இறங்கி குளித்து வருகிறார்கள். தடுப்பணையில் குளிப்பதை தடுக்க போலீசார் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். நேற்றைய நிலவரப்படி குடகனாறு அணைக்கு வினாடிக்கு 580 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் மொத்த கொள்ளளவான 27 அடியில் தற்போது 10 அடி தண்ணீர் உள்ளது.

குஜிலியம்பாறை

குஜிலியம்பாறை ஒன்றியம் ஆர்.வெள்ளோடு பகுதியில் பலத்த மழை பெய்தது. சுமார் 1½ மணி நேரம் நீடித்த இந்த மழையால் வறட்டாறு ஓடைகள் மற்றும் ஆறுகளில் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் தாழ்வான பகுதியில் உள்ள தெருக்களில் தண்ணீர் புகுந்தது. மேலும் ஆரம்ப சுகாதார நிலையம், கால்நடை ஆஸ்பத்திரியையும் மழைநீர் சூழ்ந்தது. இதனால் பொது மக்கள் ரோட்டில் நடந்து செல்ல முடியாமல் அவதிப்பட்டனர். தகவல் அறிந்ததும் தென்னம்பட்டி பழனிச்சாமி எம்.எல்.ஏ., சம்பவ இடத்துக்கு சென்று பார்வையிட்டார். பின்னர் நிவாரணப்பணிகளை உடனே மேற்கொள்ளுமாறு அதிகாரிகளை கேட்டுக் கொண்டார். ஒன்றிய ஆணையாளர் பழனிச்சாமி, துணை வட்டார வளர்ச்சி அதிகாரி காமராஜ் ஆகியோரும் உடன் சென்றனர்.


பெரும்பாறை

திண்டுகக்கல் மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலையில் உள்ள பெரும்பாறை, மஞ்சள்பிரப்பு, கொங்கப்பட்டி, புல்லாவெளி, கானல்காடு, தடியன்குடிசை,

குப்பம்மாள்பட்டி, கல்லகிணறு, கே.சி.பட்டி, ஆடலூர், பெரியூர், பாச்சலூர் போன்ற பகுதிகளில் கடந்த 2 வாரங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இதனால் புல்லாவெளி குடகனாற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுகிறது. இந்த தண்ணீர் பெரும்பாறை, புல்லாவெளி வழியாக ஆத்தூர் அணைகஇ்கு செல்கிறது. இதனால் ஆத்தூர் காமராஜர் அணை நிரம்பி விட்டது. மேலும் அந்த பகுதியில் உள்ள சிறிய ஓடைகள் அனைத்திலும் தண்ணீர் செல்கிறது. மேற்க்கண்ட மலைக்கிராமங்களில் தற்போது காப்பி பழம் சீசன் தொடங்கி உள்ளது. மழை பெய்து வருவதால் காப்பி பழம் பறிகஇ்க முடியாமல் விவசாயிகள் மிகவும் சிரமப்படுகின்றனர். வடமதுரை வடமதுரை அருகே உள்ள காணப்பாடியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் உள்ளது. இங்கு தினமும் 100-க்கும் மேற்பட்ட நோயாளிகள் வந்து செல்கிறார்கள். இந்த ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு செல்வதற்கு ரோட்டில் இருந்து 50 மீட்டர் தூரத்துக்கு மண்சாலை அமைக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக வடமதுரை பகுதியில் பலத்த மழை பெய்ததால் இந்த மண்சாலை சேறும், சகதியுமாக மாறியுள்ளது. இதனால் ஆஸ்பத்திரிக்கு செல்லும் நோயாளிகள் நடந்து செல்ல முடியாமல் அவதிப்பட்டு வருகிறார்கள். குறிப்பாக கர்ப்பிணி பெண்கள் நடந்து செல்ல மிகவும் சிரமப்பட்டு வருகிறார்கள். எனவே ஆரம்ப சுகாதார நிலையத்துக்கு செல்லும் மண் சாலையை தார்சாலையாக மாற்ற வேண்டும் என்று பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். விவசாயிகள் கவலை நிலக்கோட்டை அருகே உள்ள சீத்தாபுரம், ஆண்டிப்பட்டி, மிளகாய்பட்டி, தோப்புப்பட்டி, பிள்ளையார்நத்தம், தம்பிநாயக்கன்பட்டி உள்பட பல்வேறு பகுதிகளில் உள்ள விவசாயிகள் வெங்காயம் சாகுபடி செய்துள்ளனர். தற்போது பெய்த மழையால் வெங்காய பயிர்கள் வாடாமல் உள்ளது. ஆனால் ஒரு சில இடங்களில் பலத்த மழை பெய்ததால் வெங்காய பயிர்கள் அழுகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்

அந்த பகுதியில் வெங்காயம் சாகுபடி செய்த விவசாயிகள் கவலையில் உள்ளனர். ஆனால் மானாவாரியில் கம்பு, சோளம், குமுதவல்லி உள்ளிட்ட பயிர்களை விவசாயம் செய்த விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

## நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை எதிரொலி: முல்லைப்பெரியாறு அணை நீர்மட்டம் 136 அடியாக உயர்வு



முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் 136 அடியாக உயர்ந்தது.

<u>முல்லைப்பெரியாறு அணை</u>

தேனி மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதில் முல்லைப்பெரியாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இதனால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. நேற்று காலை நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 135.30 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 2,957 கனஅடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து 456 அடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் தற்போது 5,942 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

இதே போல் பலத்த மழைக்கு வைகை அணையின் நீர்வரத்து அதிகரித்து உள்ளது. அணையின் மொத்த உயரம் 71 அடி. தற்போது அணையின் நீர்மட்டம் 53.44 அடியாக உள்ளது. அணைக்கு வினாடிக்கு 2,764 கன அடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து 1,660 கனஅடி தண்ணீர் வெளியேறி வருகிறது. அணையில் 2,477 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது. தொடர்மழை காரணமாக மஞ்சளாறு அணைக்கு நீர்வரத்து

ஏற்பட்டு உள்ளது. அணையின் மொத்த உயரம் 57 அடி. தற்போது அணையில் 56.80 அடியாக நீர்மட்டம் உயர்ந்து உள்ளது. அணைக்கு வினாடிக்கு 808 கன அடி தண்ணீர் வரத்து உள்ளது. அணையில் இருந்து 824 அடி நீர்வெளியேற்றப்படுகிறது. அணையில் 472.64 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

<u>சோத்துப்பாறை அணை</u>

இதே போல் சோத்துப்பாறை அணையின் மொத்த உயரம் 126 அடி. அணைக்கு நீர்வரத்து அதிகரித்து வருவதால், நீர்மட்டம் 126 அடியான முழுகொள்ளளவை எட்டியது. அணைக்கு வினாடிக்கு 100 கனஅடி தண்ணீர் வரத்து உள்ளது. வினாடிக்கு 100 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அணையில் 100 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

<u>மழை அளவு</u>

மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலை 8 மணி முதல் நேற்று காலை 8 மணி வரை பெய்த மழை அளவு விவரம் வருமாறு(மில்லிமீட்டரில்):–

முல்லைப்பெரியாறு அணை – 26.6, தேக்கடி 1.4, கூடலூர் – 3, சண்முகா நதி அணை –4, உத்தமபாளையம் – 2, வீரபாண்டி – 6, வைகை அணை –16, மஞ்சளாறு – 4, சோத்துப்பாறை –3.

## <u>**இந்த ஆண்டில் 2–வது முறையாக மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடியை எட்டியது**</u>



மேட்டூர் அணையின் நீர்மட்டம் இந்த ஆண்டில் 2–வது முறையாக நேற்று 100 அடியை எட்டியது.

## 100 அடியை எட்டியது

காவிரி நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர்மழை பெய்து வருகிறது. இதன்காரணமாக மேட்டூர் அணையின் நீர்மட்டம் கடந்த சில வாரங்களாக படிப்படியாக அதிகரித்து வந்தது. நேற்று காலை மேட்டூர் அணைக்கு வினாடிக்கு 20 ஆயிரத்து 540 கனஅடி தண்ணீர் வந்தது. இந்த நிலையில் நேற்று மாலை அணை நீர்மட்டம் 100 அடியை எட்டியது. கடந்த ஆகஸ்டு மாதம் 8–ந்தேதி மேட்டூர் அணை நீர்மட்டம் 100 அடியை எட்டியது. அதன்பின் இந்த ஆண்டில் 2–வது முறையாக நேற்று நநநந4அணையின் நீர்மட்டம் மீண்டும் 100 அடி

இந்த நிலையில் தமிழக பொதுப்பணித்துறையின் திருச்சி மண்டல தலைமை என்ஜினீயர் அசோகன் பருவ கால ஆய்வுக்காக நேற்று மேட்டூர் வந்தார். மேட்டூர் அணையின் வலது கரை, இடதுகரை, கவர்னர் பாயிண்ட் உள்ளிட்ட முக்கிய பகுதிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு நடத்தினார். அதன்பின் 16 கண் மதகுகளின் இயக்கத்தை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இதையடுத்து நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:–

## 107 டி.எம்.சி.

கடந்த ஆகஸ்டு மாதம் 10–ந்தேதி டெல்டா பாசன தேவைக்காக மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்ததால் கடந்த 21–ந்தேதி முதல் பாசனத்திற்கு தண்ணீர் திறப்பு அடியோடு நிறுத்தப்பட்டது. இந்த நிலையில் மழை மேலும் தீவிரமடைந்ததன் காரணமாக அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது. இதனால் மேட்டூர் அணை நீர்மட்டம் படிப்படியாக அதிகரித்து இன்று(நேற்று) 100 அடியை எட்டியது. அமராவதி, பவானி ஆகிய ஆறுகள் மூலம் டெல்டா பாசன பகுதிகளில் உள்ள 300 ஏரிகளில்

தண்ணீர் நிரப்பபட்டுள்ளது. செங்கிரிப்பட்டியில் உள்ள 64 ஏரிகளில் 37 ஏரிகள் நிரப்பபட்டுள்ளன. இந்த ஏரிகள் மூலம் 7 டி.எம்.சி.வரை தண்ணீரை தேக்கி வைக்கலாம். டெல்டா பாசனத்திற்கு இதுவரை 107 டி.எம்.சி. தண்ணீர் கொடுக்கப்பட்டுள்ளது. மழை காரணமாக இன்னும் 10 நாட்களுக்கு டெல்டா பாசனத்திற்கு தண்ணீர் தேவை ஏற்படாது.

<u>கதவணைகள்</u>

டெல்டா பாசனத்திற்கு மீண்டும் தண்ணீர் தேவைப்படும்போது மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்படும். லோயர் அணைக்கட்டு பகுதியில் இருந்து 10 கி.மீ. தொலைவில் உள்ள ஆதனூர், குமாரபாளையம் ஆகிய பகுதிகளில் கதவணைகள் அமைக்க முதல்–அமைச்சர் உத்தரவுப்படி ஆய்வுப்பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுக்கு பிறகு ரூ.400 கோடி மதிப்பில் இந்த திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். உலக வங்கி திட்டத்தின் மூலம் ரூ.700 கோடியில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான 86 அணைகளில் 32 அணைகளில் புனரமைப்பு பணி நடைபெற்று வருகிறது. மேட்டூர் அணையில் புனரமைப்பு பணி மேற்கொள்ள ஆய்வு செய்யப்பட உள்ளது. காவிரி ஆற்றில் உள்ள ஆகாய தாமரைகளை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு பொதுப்பணித்துறையின் திருச்சி மண்டல தலைமை என்ஜினீயர் அசோகன் கூறினார். ஆய்வின்போது சேலம் வட்ட கண்காணிப்பு என்ஜினீயர் ஜோசப்லூர்துசாமி, பொதுப்பணித்துறையின் மேட்டூர் நிர்வாக என்ஜினீயர் கந்தசாமி, உதவி நிர்வாக என்ஜினீயர் கோவலன், அணைப்பிரிவு உதவி என்ஜினீயர் சிங்காரவேலு உள்ளிட்ட அதிகாரிகள் உடனிருந்தனர்.

## கடனா, ராமநதி, கருப்பாநதி அணைகள் திறக்கப்பட்டன விவசாயிகள் மகிழ்ச்சி



கடனா, ராமநதி, கருப்பாநதி அணைகள் நிரம்பி நேற்று பாசனத்துக்கு திறக்கப்பட்டதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். தொடர் மழை நெல்லை மாவட்டத்தில் பெய்த கனமழை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்தது. இதனால் அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. சில அணைகள் முழு கொள்ளளவை எட்டியதால், நேற்று திறக்கப்பட்டன. கடனா அணை ஆழ்வார்குறிச்சிக்கு மேற்கே மலை அடிவாரத்தில் உள்ள கடனாநதி அணையின் மொத்த கொள்ளளவு 85 அடி ஆகும். தற்போது 84 அடி வரை தண்ணீர் நிரம்பி உள்ளது. அணைக்கு சுமார் 10 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. கடனா அணை நிரம்பியதை தொடர்ந்து நேற்று பாசனத்துக்கு திறக்கப்பட்டது. மாவட்ட வருவாய் அதிகாரி குழந்தைவேல், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ராஜன் ரவிச்சந்திரன் ஆகியோர் மலர் தூவி அணையை திறந்து வைத்தனர். 125 நாட்கள் கடனா அணையில் இருந்து நேரடி மற்றும் மறைமுக பாசனங்களுக்காக 82 குளங்கள் வழியாக அடுத்த ஆண்டு மார்ச் மாதம் 31-ந் தேதி வரை சுமார் 125 நாட்களுக்கு தண்ணீர் திறக்கப்படுகிறது. தற்போது அணையில் இருந்து வினாடிக்கு 125 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. கடனா அணை விரிவாக்க பகுதி பாசனத்துக்காக 18 குளங்கள் வழியாக அரசபத்து கால்வாய் மூலம் தண்ணீர் வழங்கப்படும்

என்று அதிகாரிகள் தெரிவித்தனர். எனவே கடனா அணை மூலம் 9 ஆயிரத்து 923 ஏக்கர் நிலங்களில் பிசான சாகுபடி நடைபெறுகிறது. அணை திறப்பு நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் நிர்மலன் கிறிஸ்துதாஸ், உதவி செயற்பொறியாளர் ஞானசேகர், அணை உதவி பொறியாளர் சங்கர்ராஜ், தாசில்தார் சேதுராமலிங்கம், மாவட்ட விவசாயிகள் சங்க செயலாளர் கசமுத்து, தர்மபுரம் மடம் பஞ்சாயத்து தலைவர் டிபி.எம்.ரசூல் முகம்மது, அரசபத்துகால் சவுந்தரராஜன், கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர். ராமநதி அணை கடையம் அருகே உள்ள ராமநதி அணை 84 அடி கொள்ளளவு கொண்டது. தற்போது 82 அடி அளவுக்கு அணை நிரம்பி உள்ளது. அணைக்கு 90 கனஅடி வீதம் தண்ணீர் வருகிறது. பிசான சாகுபடிக்காக நேற்று ராமநதி அணை திறக் கப்பட்டது. வடகால் நீர்ப்பாசன சங்கத் தலைவர் ஜீவா என்ற அருணாசலம் தலைமை தாங்கினார். அணை பொறியாளர் முருகேசன் முன்னிலை வகித்தார். பொறியாளர் அப்துல்ரகுமான் மலர் தூவி அணையை திறந்து வைத்தார். ராமநதி அணை மூலம் 5 ஆயிரம் ஏக்கர் நிலம் பாசனம் பெறுகிறது. அதற்காக 33 குளங்கள் வழியாக தண்ணீர் வழங்கப்படுகிறது. அணை பாசனக்கால்வாயில் உள்ள 28 குளங்கள் ஏற்கனவே நிரம்பிவிட்டன, என்று அதிகாரிகள் கூறினார்கள். கருப்பாநதி அணை கடையநல்லூர் அருகே மேற்குத்தொடர்ச்சி மலை அடிவாரத்தில் உள்ள கருப்பாநதி அணையும் நேற்று பாசனத்துக்கு திறக்கப்பட்டது. கண்காணிப்பு பொறியாளர் அப்துல் அமீது அணையை திறந்து வைத்தார். அணையில் இருந்து வினாடிக்கு 100 கன அடி வீதம் தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. அதாவது, பாப்பான் கால்வாய் வழியாக 50 கன அடி தண்ணீரும், பெருங்கால்வாய் வழியாக 50 கன அடி நீரும் திறந்து விடப்பட்டுள்ளது. அணை திறப்பு நிகழ்ச்சியில் உதவி பொறியாளர் பொற்செழியன், பாசன

சங்க தலைவர்கள் ரத்தினவேல் பாண்டியன், சாகுல், சங்கரன், ராஜேந்திரன் உள்பட பலர் கலந்துகொண்டனர். அணைகள் திறக்கப்பட்டதால், அதன் பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். விவசாய பணிகளை தொடங்கி உள்ளார் கள்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## இன்றைய வேளாண் செய்திகள்

## <u>தேனீயால் வளம் கொழிக்கும் விவசாயி</u>



தமிழகத்தில் அதிக அளவு தேன் உற்பத்தி நடைபெறும் மாவட்டம் கன்னியாகுமரி. இங்கு உள்ள சீதோஷ்ண நிலை தேனீ வளர்ப்புக்கு சாதகமாக இருப்பதே இதற்குக் காரணமாகும். மார்த்தாண்டம், குலசேகரம் சுற்றுவட்டாரப் பகுதிகளில் அதிக அளவு தேனீ வளர்ப்புத் தொழில் நடைபெற்று வருகிறது. வீட்டு புழக்கடைகளில், தோட்டங்களில் என கிடைக்கும் இடங்களில் எல்லாம் பலரும் குடிசை தொழிலாக தேனீ வளர்ப்பை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களில் ஒருவராக மார்த்தாண்டம் அருகில் உள்ள கொட்டூர் பகுதியை சேர்ந்த முன்னோடி விவசாயியான ஹென்றி தேனீ வளர்ப்பில் வெற்றிக்கொடி நாட்டியுள்ளார். காலைப் பொழுதில் தேன் சேகரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த அவரிடம் பேசினோம். ''நான் 3 ஏக்கர்ல அன்னாசி சாகுபடி பண்றேன். ஒரு ஏக்கருக்கு 10 தேனீ பெட்டிகளை வைக்கலாம். நான் 3 ஏக்கரில் 30 தேனீ பெட்டிகளை வைத்திருக்கிறேன். மேலும், கேரள மாநிலம் கண்ணூர் மாவட்டத்தில்

வழக்கை பகுதியில் 15 தோட்டங்களை குத்தகைக்கு எடுத்து 300 தேனீ பெட்டிகளை வைத்துள்ளேன். ரப்பர், வாழை, தென்னை போன்ற தோட்டங்களுக்கு இடையில் தேனீ பெட்டிகளை வைத்தால் தேன் கூடுதலாக கிடைக்கும். அது மட்டுமின்றி தேனீக்களின் மூலம் அயல் மகரந்த சேர்க்கை ஏற்பட்டு பயிர்களின் மகசூலும் அதிகரிக்கும். தேனீ வளர்ப்பின் அச்சாரமே வளர்ப்புக்கு ஏற்ற நல்ல பெட்டியை தேர்ந்தெடுப்பதுதான். தேக்கு, வேம்பு, புன்னை என நல்ல மணம் வீசும் மரங்களின் பலகையில் தான் பெட்டியை செய்ய வேண்டும். இந்த பெட்டிகளில் இரண்டு வகை உண்டு. ஒன்று ஓட்டு வீடு தோற்றத்தில் இருக்கும். இன்னொன்று மேல் தளம் சமமாக இருக்கும். மேல் தளம் சமமாக உள்ள பெட்டியைத் தான் பயன்படுத்துகிறேன். ஒரு முறை தயார் செய்யப்படும் பெட்டியை முறையாகப் பராமரித்தால் 10 ஆண்டுகள் வரை பயன்படுத்தலாம். தேனீ பெட்டிகளை தரை மட்டத்திலிருந்து இரண்டரை அடி உயரத்தில் இருக்குமாறு வைக்க வேண்டும். இந்த பெட்டிகளில் மேலும், கீழுமாக இரண்டு அறைகள் இருக்கும். மேல் அறையை தேன் சேகரிக்கவும், கீழ் அறையை குஞ்சுகள் மற்றும் தேனீக்களுக்காகவும் ஒதுக்க வேண்டும். பெட்டி தயார் செய்த பின்பு தேனீக்கள் குடும்பமாக இருக்கும் தேனடைகளை வாங்கி, ஒவ்வொரு பெட்டியிலும் வைக்க வேண்டும். 6 அங்குல நீளம், 10 அங்குல அகலம் உள்ள தேனீ பெட்டி என்றால் குஞ்சுகளுக்கான அறையில் 6 அடைகளும், தேன் சேகரிப்பு அறையில் 5 அடைகளும் அமைக்கலாம்.

குஞ்சுகளுக்கான அறையில் ஒவ்வொரு அடைக்கும் இடையில் 2 அல்லது 3 மி.மீ. இடைவெளியும், தேன் அறையில் இதை விட சற்றே கூடுதலான இடைவெளியும் இருக்கலாம். ஒரு குடும்பத்தில் குறைந்த எண்ணிக்கையில் ஆண் தேனீக்கள், ஒரே ஒரு ராணி தேனீ, ஆயிரக்கணக்கான வேலைக்கார தேனீக்கள் இருக்கும். ஒவ்வொரு தேனீக்களும் ஒவ்வொரு வகையான

வேலையை செய்யும். ஆண் தேனீக்கள் இனப்பெருக்க வேலையை மட்டுமே பார்க்கும். இதன் ஆயுள் 6 மாதங்கள். ராணித்தேனீ 1000 முட்டைகள் வரை இடும். 2 ஆண்டுகள் இதன் ஆயுட்காலம். ஓர் ஆண்டு ஆயுட்காலம் கொண்ட வேலைக்காரத் தேனீக்கள் வெளியில் சென்று தேன் சேகரிப்பது, மெழுகு உற்பத்தி செய்வது, சிறிய குஞ்சுகளுக்கு உணவு கொடுப்பது போன்ற பணிகளை செய்யும். ராணித் தேனீ இறந்து விட்டால் இந்த வேலைக்கார தேனீக்கள் அவைகளில் இருந்து சுரக்கும் ''ராயல் ஜெல்லி"என்ற ஒரு வகை திரவத்தையும், தேனையும் தங்களில் ஒரு வேலைக்கார தேனீக்கு கொடுத்து அதை ராணித் தேனீ ஆக்கி கொள்ளும். ஏக்கருக்கு 10 பெட்டிக்கு மேல் கூடுதலாக வைக்க கூடாது. இந்த பெட்டிகளின் மேல் பகுதியில் பாலையை போட்டு வைப்பதன் மூலம் மழை, வெயிலில் இருந்து பாதுகாத்து கொள்ளலாம். கீழறையில் இறந்து போன தேனீக்கள், அதன் கழிவு ஆகியவை சேர்ந்திருக்கும். அதை 15 நாள்களுக்கு ஒருமுறை அப்புறப்படுத்தி விட வேண்டும். அடிப்பலகையையும் அப்போது துடைத்து வைக்க வேண்டும். எறும்புகள் ஏறாமல் பார்த்து கொள்ள வேண்டும். பராமரிப்பு பணிகள் செய்யும் போது தேனீக்கள் கொட்டாமல் இருக்க புகை போட வேண்டும். நான் ஒரு பெட்டிக்கு 30,000 தேனீக்கள் வரை வளர்க்கிறேன்.தேனுக்கான சந்தை வாய்ப்பு எப்போதும் உள்ளது. பொதுவாக பூ பூக்கும் காலங்களில் நல்ல தேன் கிடைக்கும். என்னோட 300 தேனீ பெட்டிகளில் இருந்து வருசத்துக்கு பருவ நிலையை பொறுத்து 4 முதல் 6 டன் வரை மகசூல் கிடைக்கும். ஒரு கிலோ தேன் ரூ.130-க்கு கொடுக்கிறேன். செலவெல்லாம் போக வருசத்துக்கு குறைந்தபட்சம் ரூ.2 லட்சத்து 50 ஆயிரம் வரை லாபம் கிடைக்கும்" என்றார்.

மேலும் விவரங்களுக்கு 94424 06393 என்ற எண்ணில் அவரைத் தொடர்பு கொள்ளலாம்.

## <u>இயற்கை முறையில் தென்னை சாகுபடி: லட்சங்களைக் குவிக்கும் சாஃப்ட்வேர் இன்ஜினீயர்</u>



விவசாயத்தைக் கைவிட்டு நகர்ப்புறங்களுக்கு குடிபெயரும் இன்றைய சூழலில் சாஃப்ட்வேர் இன்ஜினியர் இப்போது விவசாயத்துக்குத் திரும்பியுள்ளார். அதுவும் இயற்கை வேளாண் முறையின் மூலம் லட்சங்களைக் குவிக்கும் லாபகரமான தொழிலாகவும் விவசாயத்தை மாற்றி மற்றவர்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறார் மருதமுத்து. இயற்கை விவசாயத்தைக் கடைப்பிடித்து தென்னை சாகுபடி செய்தால் ஒரு தலைமுறை உட்கார்ந்து சாப்பிடலாம் என்பதை இவர் நிரூபித்துள்ளார். பட்டதாரி ஆசிரியரான தனது மனைவியுடன் கிராமத்தில் விவசாயத்தில் ஈடுபட்டு விவசாயமும் லாபகரமான தொழில்தான் என்பதை நிரூபித்துள்ளார். திண்டுக்கல் அருகே தவமடையில் 9 ஏக்கர் நிலத்தை வாங்கி அதில் இயற்கை முறையில் தனது மனைவி வாசுகியுடன் இணைந்து தென்னை, ரோஜா, சம்பங்கி மற்றும் காய்கறிகளை சாகுபடி செய்து வருகிறார். தனது அனுபவத்தைப் பற்றி அவர் கூறியது: "ஒவ்வொருஇளைஞர்களிடம் விவசாயி என்ற உள்ளுணர்வு தூங்கிக் கொண்டிருக்கிறது. அதைத்தட்டி எழுப்பினால் அவன் விவசாயியாகி விடுவான். சென்னையில் சாஃப்ட் வேர்இன்ஜினியராக லட்சக்கணக்கில் சம்பாதித்தாலும், மனைவி, குழந்தைகளுடன் நேரத்தை செலவிட முடியவில்லை. ஓய்வே இல்லாமல் ஓடிய நகர்ப்புற வாழ்க்கை மீது எனக்கு ஒரு கட்டத்தில் சலிப்பு தட்டியது. இந்தத் தொழிலை விட்டால் அடுத்து

விவசாயம்தான் என்னுடைய தேர்வாக இருந்தது. அன்றாடம் விவசாயிகள் தற்கொலைனு வரும் செய்திகள் என்னை மிரட்டின. விவசாயித்தில் கால் அனாகாசு கூட மிஞ்சாதுப்பா என்று பலர் கூறினர். இயற்கை விவசாயம் என்றதும்,அதுவெல்லாம் நம்ம நிலத்தில் சாத்தியமில்லைனு பயமுறுத்தினர். விவசாயத்தை லாபகரமான தொழிலாக மாற்றி ஜெயித்துக் காட்ட வேண்டும் என்ற வெறி எனக்குள் இருந்தது. சொந்த ஊரில் 9 ஏக்கர் நிலம் வாங்கி னேன். விவசாயம் செய்யத் தொடங்கினேன். படிச்ச படிப்புக்கு ஏற்ற வேலையை பார்க்காமல் விவசாயம் செய்ய வந்துட்டான்னு என்னை ஏளனம் செய்யாதவர்களே கிடையாது. இன்று அவர்களே என்னிடம், என்ன பயிர் செய்யலாம், என்ன ரகம் பயிரிடலாம் என ஆலோசனை கேட்கின்றனர்.அந்த அளவுக்கு என்னுடைய தோட்டத்தில் இயற்கை முறையில் பயிரிட்ட தென்னை, சம்பங்கி, கால உணவு பயிர்களை ஒவ்வொன்றிலும் கைநிறைய வருமானம்கிடைக்கிறது. கூலி வேலைக்கு ஆட்களை வைத்துக் கொள்வதில்லை. நானும்,எனது மனைவியுமே நாற்று நடுவோம். தண்ணீர் பாய்ச்சுவோம். அறுவடை செய்வோம். மார்க்கெட்டுக்கு எடுத்துச் செல்வோம். பெருமைக்காக சொல்லவில்லை. என்னை பார்த்து 100 இளைஞர்கள் விவசாயத்திற்கு வரனும்னு நினைச்சேன். இன்று ஒவ்வொரு மாவட்டத்திலும் 20, 30 படித்தவர்கள் விவசாயம்செய்கின்றனர். இது என்னுடைய இயற்கை விவசாயத்திற்கு கிடைத்த வெற்றி என்றார்.

திண்டுக்கல்லில் கடந்த 4 ஆண்டாக மழையே இல்லை. மாவட்டத்தில் 60 சதவீதம்தென்னை மரங்கள் அழிந்துவிட்டன. ஆனால், என்னுடைய தோட்டத்தில் ஒரு தென்னமரம் கூட பட்டுப் போகவில்லை. மொத்தம் 250 தென்னை மரங்கள் வைத்துள்ளேன். ஒரு மரத்தில் சாதாரணமாக 40 காய் கிடைக்கிறது. மாதம் 45 ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைக்கிறது. இவ்வளவுக்கும் தண்ணீரே பாய்ச்சுவதில்லை. பராமரிப்பு செலவே இல்லை.

அதற்குக் காரணம், இயற்கை விவசாயம் முறையில் செய்த நடவுமுறை. 4-க்கு 4 அடி என்ற அளவில் குழி தோண்டி, அதில் கப்பி மணல் கொட்டினேன். மாட்டு சாணம், சிறுநீரை அடி உரமாக போட்டு தென்னை மரக்கன்றுகளை நட்டேன். தென்னை மரம் அதிக தண்ணீரை ஈர்க்கும். கப்பி மணல் போட்டதால் மழைக் காலத்தில் தண்ணீரை ஈர்த்து வைத்துக் கொண்டு 3 முதல் 6 மாதம் வரை மரத்திற்கு தண்ணீர் கொடுக்கிறது. ஒரு தென்னை மரத்தின் வயது 80 ஆண்டு. மனிதனின் சராசரி ஆயுள் 60 ஆண்டு. இயற்கை விவசாயத்தில் தென்னை மரங்களைப் பயிரிட்டால் ஒரு தலைமுறைக்கு உட்கார்ந்து சாப்பிடலாம். 60 செண்ட் நிலத்தில் சம்பங்கி பயரிட்டுள்ளேன். இதிலும் ஆண்டுக்கு ரூ. 5.50 லட்சம் வருமானம்கிடைக்கிறது. செலவு போக மாதம் 30 ஆயிரம் லாபம் கிடைக்கிறது. என்னுடையஅடுத்த இலக்கு ரோஜா. இப்போதுதான் ரோஜாவை இயற்கை விவசாயத்தில் சாகுபடி செய்துள்ளேன். இதிலும் நிச்சயம் ஜெயிப்போம்" என்றார் நம்பிக்கையுடன்.

அவருடைய அனுபவங்கள் பற்றி மேலும் தெரிந்து கொள்ள 9787642613 என்ற எண்ணுக்கு தொடர்பு கொள்ளலாம்.

## இயற்கை உரமாக பயன்படும் பார்த்தீனியம்



கிராமம், நகரம் என எங்கு கண்டாலும் விரவி, பரவியுள்ளது பார்த்தீனிய செடி. வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவை தனது தாயகமாக கொண்ட இந்த விஷ களை செடி, ஈரப்பதம் கொண்ட எந்த மண்ணிலும்

வேகமாக வளர்ந்து, தன் இனத்தை வளர்த்துக் கொள்ளும் தன்மை கொண்டது. மற்ற தாவரங்களைப் போல் குறிப்பிட்ட மாதங்களில் மட்டுமல்லாமல், ஆண்டின் எல்லா மாதமும் செழித்து வளரும் தன்மை கொண்டது பார்த்தீனியம் செடி. இதன் இலைகள் வெளிர் பச்சை நிறத்துடன் இருக்கும். இதன் விதைகள் எந்த மண்ணிலும் எந்தச் சூழலிலும் முளைக்கக் கூடிய வகையில் அதிக முளைப்புத் திறன் உடையதாக இருப்பதால் இந்த விஷ களைச் செடியை அழித்து ஒழிப்பது மிகவும் கடினமாக உள்ளது.

மனிதர்களுக்கு ஆஸ்துமாவை உருவாக்கும் இந்த களைச் செடிகளை பிடுங்கி அழிப்பதை விட அதனை அப்படியே இயற்கை உரமாக மாற்றலாம் என்கின்றனர் ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடி ஜெயம் பிராணி நல அறக்கட்டளை நிர்வாகிகள். இது குறித்து அதன் நிர்வாக இயக்குநர் கே.வி.கோவிந்தராஜ் கூறியதாவது: “முதலில் 6 அடிக்கு 4 அடி அளவுள்ள (தேவைக்கேற்ப நீள அகலங்களை மாற்றிக் கொள்ளலாம்.) 4 அடி ஆழத்திற்கு குழி தோண்டி, அதில் வேருடன் பிடுங்கிய பார்த்தீனியச் செடிகளை போட வேண்டும். அத்துடன் கொழுஞ்சி, எருக்கன் இலை, வேப்பிலை மற்றும் கிடைக்கும் இலை தழைகளையும் கலந்து போட்டு இரண்டடி உயரத்திற்கு நிரப்பி, நன்கு மிதித்து அதன் மேல் சாணி மற்றும் கோமியக் கரைசல் தெளிக்க வேண்டும். அதன் மேல் மூன்று அங்குல அளவிற்கு மண் போட்டு, மீண்டும் இதே மாதிரி மூன்று நான்கு அடுக்குகள் போட்டு, மேலே மண் போட்டு மீண்டும் மூடி வைத்தால் ஓரிரு மாதங்களில் அற்புதமான இயற்கை உரம் தயாராகிவிடுகிறது. இதில் மற்ற உரங்களில் கிடைப்பதை விட நைட்ரஜன் பாஸ்பரஸ் மற்றும் பொட்டாஷ் சத்துக்கள் அதிக அளவில் கிடைக்கிறது. பயிர்களுக்கு வேண்டிய நுண்ணூட்டச் சத்துக்களும் அதிக அளவில் இருப்பதால் பயிர்களின் மகசூல் அதிகரிக்கும்.

தென்னை, மா, எலுமிச்சை மரங்களுக்கு இடையில் 2அடிக்கு 2 அடி 2 அடி குழி வெட்டி அதில் பார்த்தீனியம் மற்றும் சாணிக் கரைசல் உள்ளிட்டவற்றை

போட்டு மூடி வைத்து விட்டால் ஒரு மாதத்தில் அவை மக்கி விடும். மரத்தின் வேர்கள் அந்த உயிர்ச் சத்தை கிரகத்துக் கொண்டு நன்கு செழித்து வளர்வதுடன் அதன் காய்ப்புத் திறன் அதிகரிக்கும்" என்றார் அவர்.

**மேலும் விவரங்களுக்கு 98427 04504 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.**

## மலர் சாகுபடியில் மாதம் ரூ. 25 ஆயிரம் வருமானம்: ஊடுபயிரில் சம்பாதிக்கும் கன்னியாகுமரி விவசாயி



எந்தப் பயிரை சாகுபடி செய்தாலும், கூடவே ஊடுபயிர் சாகுபடியும் செய்ய வேண்டும் என்பதே பெரும்பாலான வேளாண் வல்லுனர்களின் கருத்து. காரணம் முக்கிய பயிர் கைவிட்டாலும், ஊடுபயிர் தாங்கி பிடித்து விடும் என்பதனால்தான். அந்த வகையில் வாழைக்கு ஊடுபயிராக 4 ஆண்டுகளுக்கு முன்பு சோதனை முயற்சியாக மேற்கொண்ட கொய்மலர் சாகுபடியால் இப்போது மாதம் ரூ.25 ஆயிரத்துக்கு குறையாமல் வருமானம் வருகிறது என்கிறார் கன்னியாகுமரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயி சசிகுமார். கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் இருந்து 2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது சாரோடு வெட்டுகாட்டுவிளை. அங்கு வாழை தோட்டத்தில் ஊடுபயிராக ஹெலிகோனியா ரக கொய் மலர்களை சாகுபடி செய்கிறார் சசிகுமார். தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் கொய்மலர் சாகுபடி நடைபெற்று வந்தாலும் அவை பெரும்பாலும் பசுமை குடிலில் வைத்தே வளர்க்கப்பட்டு வருகிறது. அவர்களிலிருந்து மாறுபட்டு திறந்த வெளியில் கொய் மலர் சாகுபடியில் ஈடுபட்டு அனைவரையும் வியப்பிலாழ்த்துகிறார் சசிகுமார். ஒரு காலைப் பொழுதில் சசிகுமாரை

அவரது தோட்டத்தில் சந்தித்தோம். மலர் பறிப்பு பணியில் ஈடுபட்டுக் கொண்டே அவர் பேசத் துவங்குகிறார். ''எனக்கு சொந்தமாக நிலம் கிடையாது. குத்தகைக்கு நிலத்தை எடுத்துதான் விவசாயம் செய்கிறேன். 4 வருசத்துக்கு முன்னாடி வெறுமனே வாழை மட்டும்தான் போட்டுருந்தேன். குமரி மாவட்ட வேளாண்மை அறிவியல் மையத்தில் இருந்து விவசாயி களுக்கு ஹெலிகோனியா பற்றிய பயிற்சி வகுப்பு நடத்தினார்கள். அதில் கலந்துகிட்ட பின்னாடி 75 சென்ட் வாழை தோட்டத்தில் வாழைக்கு ஊடுபயிராக ஹெலிகோனியாவை சாகுபடி செய்தேன். நல்ல வருமானம் கிடைச்சுது. இப்போ படிப்படியா முன்னேறி ஒன்றரை ஏக்கரில் வாழைக்கு ஊடுபயிராக ஹெலி கோனியாவை சாகுபடி செய்றேன். என்னோட தோட்டத்தில் ஹெலி கோனியா ரகத்தில் 5 ரூபாய் செடியில் இருந்து 2000 ரூபாய் செடிகள் வரை பல்வேறு ரகங்களும் நடவு செஞ்சிருக்கேன். இப்போ என்னோட தோட்டத்தில் ட்ராபிக்ஸ், வேகினேரியா (ரெட்),வேகினேரியா (மஞ்சள்), அங்குஸ்டா, தக்கோமி, கென்யா ரெட் என்று 50-க்கும் மேற்பட்ட ரகங்கள் உள்ளன. இதில் சில ரகங்கள் தினசரி பூக்கும். சில வாரம் ஒரு முறையும், சில 6 மாதங்களுக்கு ஒருமுறையும் பூ பூக்கும். ஒரே ரகத்தை நடவு செய்தால் சந்தை வாய்ப்பு இருக்காது. அதே நேரத்தில் இப்படி பல ரகங்களையும் கலந்து நடவு செய்தால் ஆண்டு முழுவதும் சந்தை வாய்ப்பு இருக்கும். இதில் சந்தோசமான விசயம் என்னன்னா ஒரு தடவை செடிகளை வாங்கி நட்டு விட்டால் வாழையை போலவே பக்க கன்று விட்டு வளர்ந்து விடும். இதனால் செடி வாங்கும் செலவு ஒருமுறை மட்டுமே. காலப்போக்கில் நம் தோட்ட தேவைக்கு போக உபரியாக இருக்கும் செடிகளை விற்றும் சம்பாதிச்சுக்கலாம். தனிப்பயிராக சாகுபடி செய்யும் போது ஏக்கருக்கு 2500 செடிகள் வரை நடவு செய்யலாம். நான் முதலில் ஊடுபயிராக 75 சென்ட்டில் 1,225 செடிகளை நடவு செய்தேன். கொய்மலர்களை பொறுத்தவரை

செடிக்கு செடி மற்றும் வரிசைக்கு வரிசை 4 அடி இடைவெளி விட்டு நடவு செய்வது நல்லது. நடவுக்கு பின் வாரம் ஒரு முறை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். அதே நேரத்தில் தண்ணீர் கட்டிவிடக் கூடாது. நடவு செய்த 85-வது நாளில் செடியின் அடிப்பாகத்தில் சிறிய பாத்தி போல் அமைத்து ஒருகைப்பிடி அளவு பாக்டம்பாஸ் மற்றும் பொட்டாஷ் கலவையை போட வேண்டும்.மூன்று மாதங்களுக்கு ஒருமுறை இந்த உரத்தை தொடர வேண்டும். இடையிடையே கோழி எரு, ஆட்டு எருவையும் தூவி தண்ணீர் பாய்ச்சுவேன். நடவு செய்த 90 வது நாளில் பூ பூக்கத் துவங்கி விடும். மொட்டு விட்டதிலிருந்து 15-வது நாளில் பறிக்க ஆரம்பித்து விடலாம். ஒரே ஆண்டில் ஒவ்வொரு செடியில் இருந்தும் குறைந்தது ஒன்பது பக்க செடிகள் முளைத்து வந்து விடும். இப்போது என்னோட ஒன்றரை ஏக்கர் தோட்டத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட செடிகள் வரை நிக்குது. இதனால் வருடம் முழுவதும் பூ கிடைக்கும். பல ரகங்களும் கலந்து கட்டி நிற்பதால் வியாபாரிகள் கேட்கும் பூவை கொடுக்க முடியும். ஹெலிகோனியாவில் டெம்ரஸ், சொர்ணம் கோல்ட், செக்ஸிபிங் ரகத்திற்கு அதிகபட்சமாக 60 ரூபாய் வரை விலை கிடைக்கிறது. ட்ராபிக்ஸ், ஆங்குஸ்டா ரகங்கள் குறைந்தபட்சம் 8 ரூபாய் வரையும் விலை கிடைக்கிறது. அறுவடை செய்த கொய்மலர்களை திருவனந்தபுரம், பெங்களூர், டெல்லி, கோயம்புத்தூர், சென்னை உள்ளிட்ட பெருநகரங்களில் அழகு பூவுக்காக சந்தைபடுத்தி வருகிறேன். தமிழகத்தில் வாழை விளையும் மண் வளம் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் இந்த கொய்மலர்களை சாகுபடி செய்யலாம். சென்னை போன்ற பெருநகரங்களை ஒட்டியுள்ள விவசாயிகள் சந்தை வாய்ப்பை ஏற்படுத்திக் கொண்டு சாகுபடி செய்யலாம்.
எனக்கு இப்போது செலவெல்லாம் போக ஹெலி கோனியாவின் மூலம் மாதம் 25,000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. சொந்த நிலம் கூட இல்லாமல் விவசாய கூலி வேலைகளுக்கு சென்று வந்த நான்

ஹெலிகோனியா கொடுத்த வாழ்க்கையின் மூலமாக வில்லுக்குறி பகுதியில் நிலத்தை குத்தகைக்கு எடுத்து நர்சரியும் நடத்தி வருகிறேன். குமரி மாவட்ட தோட்டக் கலைத் துறை அதிகாரிகளும் எனக்கு வேண்டிய தகவல் தந்து உதவுகின்றனர். ஊட்டியில் நடைபெறும் மலர் கண்காட்சி யிலும் ஒவ்வொரு ஆண்டும் கலந்து வருகிறேன். இப்போது என் தோட்டத்தில் வாழைதான் ஊடுபயிர். ஹெலிகோனியா தான் பிரதானப் பயிர்" என்றார் சசிகுமார்.

**மேலும் விவரங்களுக்கு 94876 46213 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.**